சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு: 5 | இதழ்: 10 | மார்ச் - 2024 | விலை - ரூ.15/-

VOL:5 | ISSUE: 10 | MARCH - 2024 | Rs. 15/-



ஸ்ரீ நாராயண தீர்த்த சுவாமிகள்!

சாயி பக்தர்களுக்கு ஓர் வரப்பிரசாதம்



நமது சாயி மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழுக்கு மூன்று வருடத்திற்கு ரூ.550/- மட்டும் செலுத்தி சந்தாதாராராகுங்கள்!

அறிய பொக்கிஷமான "சாயி தாயத்தை" இலவசமாகப் பெறுங்கள்!

கடன், நோய், வறுமை, செய்வினைக் கோளாறுகள், கண் திருஷ்டி, குழந்தையின்மை, குடும்ப பிரட்சினை, செய்தொழில் திருப்தியின்மை, கல்விக்குறைபாடு அனைத்தையும் போக்கி உங்கள் வாழ்வு வளம் பெறுவதற்கென்றே, சற்குரு சாயிநாதரின் திருவடிகளில் சமர்பிக்கப்பட்டு, 108 நாட்கள் தவத்தின் மூலம் உரு ஏற்றப்பட்ட சக்தி வாய்ந்த "சாயி தாயத்து"



* தாயத்தை அணிந்து பலன் பெற "குண்டலினி யோகி" ஸ்ரீராம் சாய் அவர்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு விளக்கம் பெறவும்.

* தனிப்பட்ட முறையில் தாயத்து வேண்டுவோர், தங்கள், பெயர், நட்சத்திரம், பிறந்ததேதி, தெரிவித்து பெற்றுக்கொள்ளலாம்.

தொலைபேசி எண்: 88258 31068.

தாயத்து காணிக்கை: ரூ.1001/- மட்டுமே

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

V. SRIRAM,
INDIAN BANK,(PURASAIWAKKAM BRANCH), CHENNAI.
A/C.NO: 62 19 48 06 77,
IFS CODE: IDIB000P056.

G- PAY, PHONE PAY, NO: 99418 16692

சாயி மகராஜ் குருவை தேடி
SAI MAHARAJ GURUVAI THEDI

ஆண்டு-5 மலர்-10 மார்ச் - 2024

வெளியிடுபவர் / ஆசிரியர்
V.ஸ்ரீராம்

கௌரவ ஆசிரியர்
திருமதி.S.ஜெயந்தி ஸ்ரீராம்

விளம்பர பிரிவு
திரு.T. கார்த்திகேயன், கோவை

கௌரவ ஆலோசகர்கள்

திருமதி. S.சாந்தி, சென்னை.

திருமதி.A.சரண்யா ஞானமூர்த்தி, சென்னை.

திருமதி.Dr.கீர்த்தி சௌஜன்யா, சென்னை.

திரு. B.முருகன், சோழவந்தான்.

டாக்டர் செல்வி. S.சௌம்யா, ஊட்டி

இதழ் வடிவமைப்பு
சிகரம் பப்ளிகேஷன்ஸ்

உங்கள் கருத்துக்கள், சிந்தனைகள் மற்றும் விமர்சனங்களை அனுப்ப வேண்டிய முகவரி:-

V.ஸ்ரீராம்

எண்:17/7A. பழனியப்பா முதல் தெரு, 1-வது மாடி, அயனாவரம், சென்னை 600 023.
செல்: 99418 16692,88258 31068.

கதைகளில் இடம்பெறும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே! இதழில் வெளியாகும் விளம்பரங்கள், விளம்பர கட்டுரைகளின் நம்பகத் தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. விளம்பரங்களை அவரவர் சொந்த பொறுப்பிலேயே அணுக வேண்டுகிறோம்.

அமுத மொழி



அன்பு குழந்தையே!

ஆரம்பத்தில் நான் உன்னை வணங்க ஆரம்பித்தபோது என் வாழ்க்கையில் பல அற்புதங்களை நிகழ்த்தி எனக்கு நம்பிக்கையை ஏற்படுத்தினீர்கள். ஆனால், இப்போது நீயே கதி என்று இருக்கிறேன். இருந்தும் ஏன் என்னை கைவிட்டு விட்டீர்கள் என்று கேட்கும் அன்பு குழந்தையே!

உன்னை கைவிட்டுவிட வேண்டும் என எப்போதும் நான் நினைத்ததும் இல்லை, நீ கஷ்டபட வேண்டும் என்பதற்காக உன்னை படைக்கவும் இல்லை. எந்த நிலையிலும் என் மீது நம்பிக்கை வைத்து உனது வாழ்க்கையை நடத்தவேண்டும் என்று நினைத்தே உன்னருகில் இருக்கிறேன்.

இதுவரை உனக்கு நான் செய்த எந்த அற்புதமாவது உனது வாழ்க்கையை மாற்றியிருக்கிறதா? கூறு. அதெல்லாம் சாதாரண அற்புதங்கள். தொலைந்து போன செருப்பை கண்டுபிடித்து தருவதும், காணாமல் போன நகையை தேடிப்பிடித்து தருவதும் ஒரு அற்புதமா? இதனால் உன் வாழ்க்கை மாறிவிடுமா?

இப்போதிருக்கும் சிரமமான உனது வாழ்க்கை மாறுவதே உண்மையான அற்புதம். இந்த அற்புதத்தை நீ அனுபவிக்க வேண்டும் என்பதே எனது விருப்பம். உன்னை அதற்குத் தகுதி யாக்க வேண்டும் என்பதாலேயே இந்த பாராமுகம். அதற்காக உன்னை கவனிக்காமல் இருந்துவிடுகிறேன் என நினைக்காதே! என்னை சரணா கதி அடைகிறாயா என்று கவனித்துக் கொண்டுதான் இருக்கிறேன்.

- பகவான் ஸ்ரீ சாயிபாபா

அன்பிற்கினிய சாய் சொந்தங்கள் அனைவருக்கும் வணக்கம்!

பகவான் சாயிநாதரின் அருளால் அறுபத்து எட்டாவது இதழ் மூலம் சாயி சொந்தங்களாகிய உங்களைச் சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. சென்ற இதழின் வெளியீட்டு விழா 04.02.24 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு "சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்தில்" (17/7A, பழனியப்பா முதல் தெரு, அயனாவரம், சென்னை 23) மிகச்சிறப்பாக நடைபெற்றது.



காலை 8 மணிக்கு ஆசிரியரின் சத்சங்கத்துடன் தொடங்கிய விழா தியானம், பூஜை எனத்தொடர்ந்தது. காலை பத்து மணிக்கு இம்மாத இதழை பாராயணப்பகலவன். திரு. சுந்தர் சாய்ராம் அவர்கள் வெளியிட அயனாவரம் RTO திரு.குண சேகரன் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்கள்.

விழாவில் திருமதி.மாதங்கி பாலாஜி, திரு.வெங்கடேசன், திரு.சந்திரன் திரு.உதிமூர்த்தி, திருமதி. ஜெய லட்சுமி, திரு.குமார், திரு.அகஸ்டின், திரு.இராஜசேகர், திரு.அய்யாகண்ணு, திரு.உமாசங்கர்,





மற்றும் அயனாவரம் RTO திரு. குணசேகரன் அவர்கள் தனது குடும்பத்தினருடன் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திரு.சுந்தர்சாய் அவர்களும் திருமதி.மாதங்கி பாலாஜி, திரு.குணசேகரன் அவர்களும், தங்களது அனுபவங்களை பக்தர் களிடையே பகிர்ந்து கொண்டனர். திரு.அகஸ்டின் அவர்கள் சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின் எதிர்கால திட்டங்களைப் பற்றி பக்தர்களிடையே உரையாற்றினார்.

சிம்மக்குரலோன் திரு. சந்திரன் அவர்கள் தனது காந்தக்குரலால் பாபா வின் பாடல்களைப்பாடி பக்தர்களைப் பரவசப்படுத்தினார்.

விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் “சாய் தியானாலயா அன்னதான குழுவினர்” அன்ன





பிரசாதம் வழங்கினர்.

புத்தக வெளியீட்டை ஒட்டி இல்லாதவர்களுக்கும், இயலாதவர்களுக்கும், அவர்கள் இருக்கும் இடம் தேடிச்சென்று அன்னதானம் வழங்கப்பட்டது.

மதுரை திரு. சண்முகநாதன் அவர்கள் நமது இதழுக்கு இரண்டு ஆயுள் சந்தாதாரர்களையும், மூன்று வருட சந்தாதாரர்களை இருவரையும் இணைத்து சாயி சேவை புரிந்துள்ளார். அவரும், அவரது குடும்பத்தினரும் அனைத்து நலன்களும் பெற்று வாழ்க வளமுடன் என்று வாழ்த்துகிறோம்.

பகவான் சாயிநாதரின் அருளால் அனைவரும் அனைத்து நலன்களும் பெற்று, உலக மாந்தர்கள் அனைவரும் போர், பகை, அச்சமின்றி ஆரோக்கியத்துடனும், மனநிம்மதியுடனும் வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து நிறைவு செய்கிறோம். மீண்டும் அடுத்த மாதம் சந்திப்போம்.

வாழ்க வளமுடன்!

வாழ்க வையகம்!

– அன்புடன் ஆசிரியர்



ஓம் சாய்ராம்

வாழ்வை வளமாக்கும் இனிய சாயி லிகித ஜபம்

சாய் அன்பர்களுக்கு பணிவான வணக்கத்துடன்...

ப்ரபஞ்சத்தின் ஆற்றல்மிக்க சக்தி ஸ்வரூபனான நம் அன்பு சாய் மஹராஜ் க்ருபையினால் நமக்கு அளிக்கப்பட்ட திரு மந்த்ரமான,

"ஓம் ஸ்ரீ சாய் ராம ஜயம்" என்ற

சக்தி வாய்ந்த லிகித நாம ஜபம் தினமும் 108 முறை யாவது மனம் ஒன்றி எழுதி நமது கர்ம வினைகளின் தாக்கத்தில் இருந்து, தற்காப்பு செய்து கொள்வதுடன், நமது அனைத்து காரியங்களிலும், பேரொளியாய் சாய்நாதர் வழி காட்டி, பரிபூரணமாய் நம்மை ஆசீர்வதிக்க ப்ரார்த்திப்போம் வாரீர்.



'லிகித நாம ஜபம் மனித குலத்திற்கு மாமருந்து'

தொடர்புக்கு;

சுந்தர்சாய், செல்: 9789404451

சாய் தியானாலயாவில் "சாயி லீலா"



– ஜெயந்தி ஸ்ரீராம்

சென்ற இதழில் பாபாவை அறியாமலே பாபாவின் பக்தையான கல்பனாவின் கதையினை படித்திருப்பீர்கள். அந்தக்கதையில் இருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால், "நீ என்னை அறிவதற்கு முன்பே நான் உன்னை அறிகிறேன்" என்ற பகவான் சாயி பாபாவின்" அருள் வாக்கினைத்தான்.

எனவே சாயி பக்தர்களாகிய நாம் எதற்குமே கவலைப்படாமல் "நான் சாயி பாபாவின் பக்தை" என்ற கர்வத்தோடு பயமின்றி வாழலாம்.

இனி, இம்மாதம் சர்மிளா என்ற அன்புச்சோதரியின் கதையினைக் கேளுங்கள். சர்மிளா மாற்று மதத்தைச் சேர்ந்த அன்புச் சகோதரி. கல்லூரியில் படித்த காலத்தில் தன்னோடு படித்த சக மாணவரையே காதலித்து திருமணம் செய்து கொண்டார்.

கணவர் வேறு மதத்தைச் சேர்ந்தவராதலால் இருவர் வீட்டிலும் அதிக எதிர்ப்புகள். அனைத்தையும் சமாளித்து ஒருவழியாக திருமணத்தை முடித்து இல்லறத்தை ஏற்றுக்கொண்டு கடுமையான சிரமத்தோடு வாழ்க்கையை ஓட்டி வந்திருக்கின்றார்கள்.

சகோதரியின் தாய் ஒரு சாய் பக்தை. அதை அவர்களின் சமுதாயம் ஏற்காது என்றாலும், மனதிற்குள்ளாக பாபாவின் மேல் அந்தத் தாய்க்கு அபார நம்பிக்கை. மகளின் மேல் அதிக பாசம் கொண்ட அந்த தாய் ஏற்கனவே மகளின் திருமணத்திற்காக பாபாவிடம் பிரார்த்தனை வைத்திருக்கின்றார்.

இதற்கிடையே சகோதரி நிறைமாத கர்பிணியாக இருந்த நேரம். கணவருடன் இருசக்ர வாகனத்தில் செல்லும்போது விபத்து ஏற்பட்டு வயிற்றில் பலமான காயத்துடன் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டிருக்கின்றார். மருத்துவர்கள் பரிசோதித்துப் பார்த்துவிட்டு, வயிற்றில் அடிபட்டுள்ளதால், தாய்க்கும், சேய்க்கும் பாதிப்பு ஏற்படும் என்று கூறியிருக்கின்றார்கள்.

என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நின்ற சமயத்தில், விபரத்தை

கேள்விப்பட்ட சகோதரியின் தாயார், தன் சமுதாயத்தின் எதிர்ப்பையும் மீறி மயிலை சாய்பாபாவின் ஆலயத்திற்கு சென்று தன் மகளுக்காக மனமுருகி வேண்டிக்கொண்டு "உதி" வாங்கிக் கொண்டு மருத்துவமனைக்கு விரைந்திருக்கின்றார்.

மருத்துவமனையில், சகோதரிக்கு ஆறுதல் கூறியவர், அவரின் நெற்றியிலும், வயிற்றிலும் உதியை பூசிவிட்டு, சிறிது உதியை நீரில் கலக்கி குடிக்கக் கொடுத்திருக்கின்றார். "உதி"யைப்பற்றி அறியாத சகோதரி தன் தாயிடம் இது என்னம்மா என்று கேட்டிருக்கின்றார்.

இது சாய்பாபாவின் "உதி" மிகவும் சக்தி வாய்ந்தது. உதியின் மீது நம்பிக்கை வைத்தால் நடக்காத காரியமே கிடையாது. என்று உதியைப் பற்றியும், பாபாவைப் பற்றியும், எடுத்துக்கூறி, நீயும் நம்பிக்கையோடு இரு என்று ஆறுதல் கூறியிருக்கின்றார்.

சகோதரியும் அப்போதைக்கு நம்பிக்கையுடன் உதி கலந்த நீரை குடித்திருக்கின்றார். ஒரு சில மணிநேரங்களில் மருத்துவர்களே வியக்கும் வண்ணம், எந்த பிரட்சனையும் இன்றி சுகப்பிரசவத்தில் ஆண் குழந்தையை பெற்றெடுத்திருக்கின்றார் சகோதரி.

நிறைமாத கர்ப்பிணியான தாயின் வயிற்றில் காயம் ஏற்பட்டு, மருத்துவர்களே பயப்பட்டும் பகவான் சாயிநாதரின் கருணையால் சுகப்பிரசவம் நடந்து தாயும், சேயும் நலமுடன் இருப்பதைக் கண்ட அந்தத் தாய் உடனே ஓடிச்சென்று மயிலை சாயிநாதருக்கு தன் நேர்த்திக்கடனை செலுத்தி வந்தார்கள்.



பகவான் சாயிநாதரால்தான் இக் காரியங்கள் நிகழ்ந்தன என்று அந்தத் தாய் மனப்பூர்வமாக நம்பினாலும், தனது காதல் திருமணத்தால் பல்வேறு குடும்ப பிரட்சனையில் சிக்கித் தவித்த சகோதரி சர்மிளா அவர்கள் பகவான் சாயிநாதரின் லீலைகளை அப்போது உணரவில்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

பத்தாண்டுகாலம் கணவர் வீட்டிலும், சகோதரி வீட்டிலும் நடந்த பிரட்சனைகள், இருவருக்குமே நிம்மதியை இழக்கச்செய்து பல மனநலப்பிரட்சனையும், உடல்நலப் பிரச்சனையும் கொண்டுவந்து விட்டிருக்கின்றது. சகோதரி உடல் நலப்பிரச்சனையினால் பல வகையில் பாதிக்கப்பட்டு, முக்கியமாக கைகளை தூக்கவே மிகவும் சிரமப்பட்டிருக்கின்றார்.

அந்த நிலையில்தான், அவர்களது

தோழியின் வழிகாட்டுதலின் படி நமது சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்திற்கு வந்து குருவை சந்தித்தார்கள். குருவும் அவர்களுக்கு யோகாவும், தியானமும் கற்றுக்கொடுத்தார்கள். நாளடைவில் சகோதரி உடல்நலப்பிரட்சனையில் இருந்து மீண்டு வந்தார்கள்.

முதல்முதலில், நமது சபைக்கு வந்தபோது அங்கு இருந்த சீரடி சாய் நாதரின் எட்டடி உயரப் படத்தைப் பார்த்து இவர் யார் என்று கேட்டார்கள். குரு சகோதரிக்கு பாபாவைப் பற்றி எடுத்துக் கூறினார்கள். சகோதரியும் பத்தாண்டுகளுக்கு முன்பே அவர்களது தாயின் மூலம் பாபா தனக்கு செய்த அற்புதங்களை கூறி ஆச்சர்யப்பட்டார்.

இதுவரை தனக்கு பாபா என்ற பெயர் மட்டுமே தெரியும். ஆனால் இப்போதுதான் இவரது படத்தை பார்க்கின்றேன். என்று கூறி வியந்தார்.

பாபா இந்த உலகத்தில் எல்லா இடங்களிலும், எல்லா ரூபங்களிலும் உள்ளார். ஆனால் நம் கர்மவினைகள் தீரும் வரை நம் கண்களுக்கு தென்பட மாட்டார். இதுவரை நீங்கள் பார்க்காத பாபாவை இப்போது நீங்கள் பார்த்ததால் உங்களது கர்ம வினைகள் தீர்ந்தது என்று பொருள். இனி இவரை இறுக்கிப் பிடித்துக்கொள்ளுங்கள். உங்கள் அனைத்துப் பிரட்சனையும் எளிதில் தீரும். என்று கூறினார் குரு.

சகோதரியும், போகப் போக சபையில் நடக்கும் பாபா வழிபாட்டிலும் கலந்து கொண்டார். சகோதரி நிறையப் படித்தவள் என்றாலும், ஆரம்பத்தில் தன்னைச் சுற்றி இருக்கும் தான் சார்ந்த சமுதாயத்தையும், மக்களையும், கண்டு



மிகவும் பயந்து மன இறுக்கத்தில் இருந்தாள். குரு அவர்கள் தியானத்தின் முலம் பாபாவை உணர்ந்து கொண்டு தன்னை மேம்படுத்திக்கொள்வது எப்படி என்பதை கற்றுத்தந்தார்.

தியானம் கற்றுக்கொள்வதற்கு மதம் மாற வேண்டுமோ என்று பயந்த சகோதரியிடம், தன்னை உணர்வதற்கு ஒருவர் மதம் மாற வேண்டியதில்லை எனவும், மனம் மாறினால் போதும் எனவும் எடுத்துக்கூறி அவரது தயக்கத்தை அகற்றி அவர்களை முழுமையாக யோகாவிலும், தியானத்திலும் ஈடுபடுத்தினார்.

சகோதரி சர்மிளாவும், மிகவும் அர்பணிப்போடு குரு கற்றுத்தந்த தியானம், யோகாவை கற்றுக்கொண்டு தனது மனப்பிரட்சனையில் இருந்தும், உடல் நலப்பிரட்சனையில் இருந்தும் விரைவிலேயே வெளிவந்தார்.

தனது இரண்டு சகோதரர்களுக்கு திருமணம் ஆகியும் வெகுநாட்களாக குழந்தை இல்லாததற்காக சகோதரி நமது சபையில் பிரார்த்தனை வைத்தார். பிரார்த்தனை வைத்த அடுத்த வருடமே இருவருக்குமே குழந்தைச் செல்வத்தை பாபா அருளினார். சகோதரிக்கு பாபாவின் மேல் நம்பிக்கை கூடியது.

17.1.2019 ஆம் வருடம் "சாய் தியானாலயா" ஏற்பாடு செய்த சீரடி புனிதப் பயணத்தில் குடும்பத்துடன் கலந்து கொள்ள ஆசைப்பட்டு குருவிடம் பெயர் கொடுத்து விட்டார்கள். குருவும் பயணத்திற் குண்டான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவிட்டார்.

திடீரென்று சகோதரியின் கணவ ருக்கு முழங்கால் வலி வந்து மிகவும் சிரமப்பட்டார். மருத்துவமனையில் சிகிச்சை பெற்று காலில் பட்டை அணிந்திருந்தார். மருத்துவர்கள் நீண்ட தூரப் பயணத்தை தவிர்க்கும்படி கூறியிருக்கின்றார்கள்.

சகோதரி சர்மிளாவும் குருவிடம் விபரத்தைக்கூறி, சீரடிக்கு வரமுடியாத நிலையில் இருப்பதைக்காகமிகவும் வருத்தப்பட்டார்கள்.அதற்கு குரு அவர்கள், உங்கள் குடும்பத்தார் சீரடிக்கு வரவேண்டும் என்பது பகவான் சாயிநாதரின் ஆணை. அதனால் தான் நீங்கள் பெயர் கொடுத்தீர்கள். நானும் பயணத் திற்குண்டான அனைத்து ஏற்பாடுகளும் செய்து விட்டேன். பயணத்திற்கு இன்னும் பத்து நாட்களே இருக்கின்றன.

அதற்குள் சாயி என்னென்ன லீலை களை நடத்துவாரோ! யாமறியோம் ஆகவே அமைதியாக இருங்கள். வரச்சொன்னால் போவோம். இல்லை என்றால் கேன்சல் செய்து கொள்வோம். எல்லாம் அவர் விருப்பம். இதில் நமது விருப்பம் ஏதுமில்லை. அமைதியாக இருங்கள் என்று கூறி விட்டார்.

பயணத்தேதியும் வந்துவிட்டது. சகோதரியின் கணவரோ நான் கட்டாயம் பாபாவை தரிசிக்கப் போகிறேன் என்று காலில் கட்டுடன் புறப்பட்டுவிட்டார். வேறுவழியின்றி சகோதரியும் அவர்களது குழந்தைகளும் புனிதப் பயணத்திற்கு புறப்பட்டுவிட்டார்கள்.

சகோதரியின் கணவர் சற்று சிரமத்துடன்தான் பயணம் மேற்கொண்டார். ஒருவழியாக மறுநாள் மாலை நாங்கள் பகவான் சாய் நாதரை தரிசித்துவிட்டு வெளியில் வருகிறோம். சகோதரியின் கணவர் எங்கள் பின்னால் வருகிறார். நாங்கள் குருஸ்தான் வந்து விட்டோம் பின்னால் இருந்து சகோதரியின் கணவர். பாபா என்று தன்னைமீறி கத்துகிறார். எண்ணவோ ஏதோ என்று நாங்கள் அனைவரும் திரும்பிப் பார்க்க, அவரோ நேராக குருவை நோக்கி ஓடி வருகிறார்.

நாங்கள் அனைவரும் அவரை ஆச்சர்யமாகப் பார்க்க, அவரோ தனது காலில் போட்டிருந்த கட்டை கழற்றி வீசிவிட்டு என் கால்வலி சரியாகி விட்டது. என் கால் வலி சரியாகி விட்டது. பாபாவுக்கு நன்றி! பாபாவிற்கு நன்றி! என்று குருவின் கைகளைப் பிடித்துக்கொண்டு சுற்றுகிறார்.

அந்திகழ்வைப் பார்த்த அங்கிருந்த பக்தர்கள் அனைவரும் எங்களுடன் சேர்ந்துகொண்டு "சாய்நாத்

மகராஜ்கீ ஜே" என்று பகவான் சாய்நாதருக்கு வாழ்த்துக்குரல் எழுப்பினார்கள். பாபா கலியுகத் தின் கண்கண்ட தெய்வம் என்ப தற்கு இதைவிடவா சான்று தேவை.

தன் கண்முன்னால் பாபாவின் லீலைகளைக்கண்ட சகோதரி சர்மிளா குடும்பத்துடன் பாபாவிற்கு கண்ணீர் மல்க நன்றி தெரிவித்துக்கொண்டார். பல மனப் போராட்டங்களுக்குப் பின் இன்று அவரும் அவரது குடும்பத்தினர் அனைவரும் பகவான் பாபாவை முழுமையாக ஏற்றுக்கொண்டிருக்கின்றனர்.

சாய் தியானாலயா ஆத்மஞான பீடத்திற்கு வந்து குருவிடம் தீட்சை எடுத்துக் கொண்டதில் இருந்து நான் நிறையக் கற்றுக்கொண்டிருக் கின்றேன். "அன்னதானம்" என்ற நிகழ்வை உணர்வுப்பூர்வமாக உணர்ந்திருக்கிறேன். " சபையில் நிகழும்" மவுனம்" நிகழ்ச்சியில் கலந்து கொண்டு அனுபவப்பூர்வமாக நிகழ்காலத்தை உணர்ந்தேன்.

மொத்தத்தில் இந்த கரடு முரடான மனித வாழ்க்கையை எப்படி எதிர்கொண்டு சமாளிப்பது என்று கற்றுக்கொண்டேன். எங்கள் குரு அடிக்கடி எங்களிடம், " நாம் பாபாவின் பக்தராகி விட்டதால் நமக்கு இன்பங்கள் மட்டுமே நடக்க வேண்டும் என்று கட்டாயமில்லை. நமக்கு ஏற்படும் துன்பங்களில் இருந்து எப்படி வேளியேறுவது என்பதை கற்றுக்கொள்வதே நாம் பாபாவின் பக்தர்கள் ஆனதற்குண்டான அழகு"



என்று கூறுவார்.

அதை நான் கற்றுக் கொண்டிருக்கி றேன். பாபா எங்களுக்கு நிறைவான வாழ்க்கையை கொடுத்திருக்கிறார். எங்களை நன்றாக பார்த்துக் கொள்ளும் பாபா, எங்கள் குழந்தைக ளையும் பார்த்துக்கொள்வார். இந்த நம்பிக்கையையும், பொறுமையையும் கற்றுத்தந்த பகவான் சாயி பாபாவிற்கும், அதை எங்களுக்குப் புரிய வைத்த எங்கள் குருநாதருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம் என்று கூறி, தன் அனுபவத்தை பகிர்ந்து கொண்டார் அன்புச்சகோதரி.

–அடுத்த மாதம் இன்னுமொரு சாயி பக்தையின் அனுபவத்தை பகிர்ந்து கொள்ளுவோம்.

– தொடரும்

"ஸ்ரீ பாத ராஜம் சரணம் ப்ரபத்யே"

சமர்த்த சத்குரு வீரடி சாய் மஹராஜின் க்ருபையாலும், கலியுக பரிபூரண தத்த அவதாரியான, ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் அனுக்கிரகத்தினாலும், கலியுகத்தில் இருந்து மீண்டும் சத்ய யுகம் உருவாக ஸ்ரீ வல்லபர் மீண்டும் அவதாரம் செய்து, உயிர்கள் அனைத்திற்கும் நல்லருள் பொழிந்திட, சுவாமியின் நாம ஜபம் ஒன்றே முழுமையான பாதுகாப்பு கருவியாகும்.



"திகம்பரா திகம்பரா ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லப திகம்பரா"

"திகம்பரா திகம்பரா ஸ்ரீ சக்ரதத்தாத்ரேயா திகம்பரா"

– எனும் சக்தி வாய்ந்த நேர்மறை ஆற்றலைக் கூட்டும் மாமந்திரத்தை தினமும் "108" முறையாவது ஜபம் செய்து, எதிர்மறை சக்தியின் தாக்கத்தில் இருந்து தற்காப்பு பெற்றிடுவோம் வாருங்கள் நண்பர்களே!

"ஜய ஜய ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபா"

விபரங்களுக்கு; **சுந்தர்சாய், 9789404451**

“சாயி சேவகி”

பாபாவின் எத்தனையோ அடியவர்களில் மிகவும் போற்றத்தக்க உன்னதமான அடியவர் ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயி! அதிலும் அவர் ஒரு பாரம்பரியமான வம்சத்தின் பெண்மணி. பகவான் சாயிநாதரின் “துவாரகாமாயி” உலகத்திற்குள் வாழ்ந்த மனிதர்களுக்குள், புனிதமான பக்தியின்,ஆழமான வெளிப்பாட்டை பக்தர்களுக்கு உணர்த்தியவர்களில் முதலிடம் பெறுபவள்.

கடுமையான சோதனைகளுக்குப்பின் விளைந்த முத்து அவள். சாய்பாபா வசித்த துவாரகாமாயி வளாகத்தை அமைதிய ான, ஆனால் சக்திவாய்ந்த முறையில், ஒவ்வொரு நாளும் சுத்தம் செய்யும் கடமையை ஏற்றுக் கொண்டு முழு அர்ப்பணிப்புடன் செய்து வந்தாள். தொலை நோக்கான இந்தப்பணி அதன் சாதாரண இயல்பை கடந்து, பின்னால் ஒரு புனித சடங்காக மாறியது.

அவளது சுயமான, அற்புதமான சேவை, “சாய் சனஸ்தான்” என்ற கடவுளின் ராஜ்ஜியத்தில் அவளை தவிர்த்து வேறு யாருக்கும் முன்னுரிமை கொடுக்க முடியாதபடிக்கு அவளது தன்னலமற்ற சேவை முன்நிற்கின்றது.

தினமும் ஆசிரமத்தின் மைதானத்தை துடைப்பது என்பது மற்றவர்களைப் போல அவளுக்கு உடல் சார்ந்த வேலை அல்ல! அவளைப் பொறுத்தவரையில் அது ஒரு ஆன்மீக காணிக்கையாக இருந்தது, அவளுடைய வணக்கத்திற் குரிய கடவுள் சாய் பாபாவுக்காக அவளுடைய ஆராதனையை வெளிப் படுத்துவதற்கான ஒரு வழியாக அதை அவள் கடைபிடித்தாள்.

துடைப்பத்தின் ஒவ்வொரு மென்மையான அசைவிலும், தூசியையும், குப்பைகளையும் அகற்றும் தாள அசைவில், ஸ்ரீ இராதா கிருஷ்ண மாயி, தெய்வீகத்துடன் தொடர்புகொண்டாள். சேவையின் செயல் புனித நடனமானது, பகவான்



சாயிநாதரின் ஆத்ம ஞானத்தை தழுவிய ஆன்மீக சாரத்துடன் அது தொடர்பு கொண்டது.

பெண் சாய் பக்தர்களுக்கு, ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயின் சிந்தனையும், செயலும் ஓர் ஆழமான உந்து சக்தியாக உள்ளது. சாய் பாபாவின் தத்துவத்தின் நெறிமுறைகளில் தன்னலமற்ற சேவையின் போதனைக ளை இது எதிரொலித்துக் கொண்டே இருக்கும்.



தனது செயல்கள் மூலம், உலக சாயி பக்தர் களுக்கு ஒரு செய்தியை அவள் பரப்பியிருக்கிறார். அது பக்தியின் பிரபஞ் சத்தன்மை மற்றும் சேவையின் மாபெரும் சக்தி என்பதை அவள் எப்போதும் நமக்கு வலியுறுத்துகிறார்.

அன்றாட பணியின் எளிமையில், சரணாகதி, மற்றும் அர்பணிப்பின் உணர்வாக உருவெடுத்தார் ஸ்ரீ இராதா கிருஷ்ண மாயி. அவளது துடைக்கும் செயல். தூய்மையின் அடையாளமாக மாறியது. அவளது பக்தியை பார்த்த, கேட்ட, மனிதர்களின் இதயங்களில் இரக்கம் என்ற உணர்வு கசியவில்லை என்றால் அவர்களது இதயம் துடிப்பை நிறுத்திவிட்டது என்று பொருள்.

சாய் பாபாவின் போதனைக ளுக்கும், சோதனைகளுக்கும் உட்படுத்தப்பட்ட ஸ்ரீ இராதாகிருஷ் ணமாயியின் சேவை என்பது, அன்பு மற்றும் மரியாதை ஆகியவற்றின் மேலான வெளிப்பாடாகவே எப்போதும் வெளிப்படும். அதுவே பரமபக்தியின் எல்லையன்றோ!

அவளுக்குப் பின்னால் வந்த தற்போதைய பெண் சாய் பக்தர்களை, ஸ்ரீ இராதாகிருஷ்ணமாயியின் ஆழமான தாக்கத்தை பணிவான செயல்களின் மூலம் பிரதிபலிக்க வேண்டுகிறோம். அன்பு மற்றும் பக்தியுடன், சேவையில் ஈடுபடும் போது பக்தைகளின் எளிமையான சைகைகளில் கூட, மிகப்பெரிய சேவைகளை செய்துவிட முடியும்.

நம்மை எல்லாம் வாழவைத்துக் கொண்டிருக்கும் பகவான் சாய்நாதரின் கதைகளிலும், அவரது போதனைகளிலும் கூட, தன்னலமற்ற சேவை மற்றும் அசைவற்ற பக்தி ஆகியவற்றின் மீது ஆழமான அர்ப்பணிப்பின் ஊக்குவிப்பையே நாம் காணலாம்.

அவ்வரிய தன்னலமற்ற சேவையின் சின்னமாகவே தன் வாழ்வை கழித்த அன்னை ஸ்ரீ இராதா கிருஷ்ணமாயியின் அற்புத காவியத்தினை ஊன்றிப் படித்து அதன் பொருள்புரிந்து அவரின் வழிநடத்தலே பகவான் சாயிநாதரை நாம் வணங்குவதின் அர்த்தமாகும்.

அன்னையின் சரிதத்தை அன்பு நண்பர், "அம்மையின் மைந்தன்" கூத்தனூர் திரு. சரவணன் அவர்கள், சிறப்புற எழுதி வெளியிட்டுள்ளார்கள். அதுமட்டுமின்றி, அன்னைக்கு சிலை வடித்து கூத்தனூர் சிவசித்தர் சாயிபாபா ஆலயத்தில் பிரதிஷ்டை செய்து பக்தர்கள் வழிபாடு செய்யும்படி வழிவகை செய்துள்ளார்கள்.

ஜெய் ஸ்ரீ
இராதாகிருஷ்ணமாயி!

பரிகாரம் என்றால் என்ன?

எல்லா பரிகாரமும் செஞ்சிட்டோம். ஒன்னும் பிரயோஜனம் இல்லை. எதுவும் நடக்கலே இதுக்கு மேல என்ன செய்றதுன்னே புரியலே. பல நேரங்களில் ஜோதிட ஆலோசனைகளின் பேரிலும் அல்லது தோஷங்களுக்காக பரிகாரம் செய்பவர்கள் மனதிலும் தோன்றும் விரக்தி இது.

அவர்களுக்கு மட்டுமல்ல பரிகாரம் என்றால் உண்மையில் என்ன என்று புரியாதவர்களுக்காகவும் தான் இந்தக் கதை! படிப்பதோடு நின்றுவிடாமல் இது உணர்த்தும் நீதியை மறக்காமல் பின்பற்றி பலனடைவோமாக.

ஒரு ராஜா காட்டுக்கு வேட்டையாட சென்றார். நேரம் போனது தெரியாமல் வேட்டையாடிக் கொண்டிருக்கும்போது மாலை நேரம் வந்து எங்கும் இருள் கவ்வத் தொடங்கிவிட்டது.

அப்போது தூரத்தில் தெரிந்த ஒரு மரத்தின் மீது ஏதோ ஒரு மிருகம் அமர்ந்திருப்பதை போல இருந்தது. மிகப் பெரிய உருவமாக இருந்தபடியால் ஏதேனும் கொடிய மிருகமாகத் தான் இருக்கவேண்டும் என்று கருதி, வில்லில் அம்பைப் பூட்டி மரத்தை நோக்கி பாணத்தை செலுத்தினான்.

அடுத்த சில வினாடிகளில் மரத்தின் மீதிருந்து "ஐயோ, அம்மா" என்ற குரல் கேட்டது. ஏதோ ஒரு மிருகத்தின் ஓலம் கேட்கும் என்று எதிர்பார்த்தால் இப்படி மனிதனின் ஓலம் கேட்கிறதே! யாரையோ தவறுதலாக கொன்று விட்டோமோ என்று அஞ்சி மரத்தை நோக்கி விரைந்தான் மன்னன்.

அங்கு சென்று பார்த்தால் பதினாறு வயதையொத்த சிறுவன் ஒருவன் தனது அம்புக்கு பலியாகி வீழ்ந்து கிடந்தான்.இப்படி ஒரு விபரீதம் நிகழ்ந்துவிட்டதே என்று பதைபதைத்த அரசன், உடனே காவலாளிகளை கூப்பிட்டு, இவனது பெற்றோர் அருகே தான் எங்காவது இருக்கவேண்டும். உடனே கண்டுபிடித்து அழைத்து வாருங்கள் என்று கட்டளையிட்டான்.

வீரர்கள் நாலாபக்கமும் விரைந் தனர். கடைசியில் ஒரு விறகுவெட்டி தம்பதியினரை அழைத்து வந்தனர். இவர்கள் தான் அந்த பாலகனின் பெற்றோர். காட்டில் விறகு வெட்டி பிழைப்பது தான் இவர்கள் தொழில் என்று மன்னனிடம் கூறினார்கள்.

மன்னன் அவர்களிடம் நடந்ததைக் கூறி, என்னை மன்னித்துவிடுங்கள். நான் வேண்டுமென்று உங்கள் மகனை கொல்லவில்லை. அறியாமல் நடந்த தவறு இது. போதிய வெளிச்சம் இல்லாததாலும் தூரத்திலிருந்து அம்பெய்ததாலும் மரத்தின் மீதிருந் தது ஏதோ ஒரு விலங்கு என்று எண்ணி விட்டேன் என்று தான் சொன்னதைக் கேட்டு அவர்கள் சமாதானாகவில்லை என்று யூகித்துக் கொண்டான்.

அடுத்தநொடி கைதட்டி தனது காவலர்களை அழைத்தவன் இரண்டு பெரிய தட்டுக்கள் கொண்டு வருமாறு கட்டளையிட்டான். அருகே நின்றுகொண்டிருந்த அமைச்சரிடம்,

இரண்டு தட்டுக்களை அவர்கள் முன்பு வைக்கச் சொன்னான்.

தட்டுக்கள் வைக்கப்பட்டபிறகு அதில் ஒரு தட்டில் பொற்காசுகளை கொட்டி தான் அணிந்திருந்த விலை மதிப்பற்ற ஆபரணங்கள் நகைகள், நவரத்தின மாலை, முத்தாரம் என அனைத்தையும் வைத்தான். பின்னர் தன் இடுப்பிலிருந்த உடைவாளை உருவி, அதை மற்றொரு தட்டில் வைத்தான்.

மக்களை காக்கவேண்டிய நானே எனது குடிமகன் ஒருவன் உயிரிழக்க காரணமாகிவிட்டேன். நான் தண்டிக்கப்படவேண்டியவன். பாதிக்கப்பட்ட உங்களிடமே தீர்ப்பை கூறும் வேலையை விட்டுவிடுகிறேன். நான் செய்த தவறுக்கு பரிகாரம் இது தான். இதோ ஒரு தட்டு நிறைய பொற்காசுகளும், விலைமதிப்பற்ற ஆபரணங்களும் இருக்கின்றன.

அவற்றை எடுத்துக்கொண்டு என்னை மன்னியுங்கள். அப்படி மன்னிக்க விருப்பம் இல்லை என்றால், மற்றொரு தட்டில் இருக்கும் உடைவாளை எடுத்து என்னை வெட்டி வீழ்த்தி உங்கள் மகனைக் கொன்றதற்கு பழி தீர்த்துக்கொள்ளுங்கள் என்று பெற்றோர் முன்பு மண்டியிட்டு அமர்ந்தான் அரசன்.

உடன் வந்த காவலர்களுக்கும் மந்திரி பிரதானிகளும் நடப்பதை பார்த்து திகைத்துப் போய் நின்றனர். அந்த விறகுவெட்டி நம் மன்னனை வெட்டிக் கொன்று விட்டால் என்ன செய்வது? மக்களுக்கும் மகாராணியாருக்கும் என்ன பதில் சொல்வது, செய்வதறியாது திகைத்துப் போய் நின்றனர்.

சில நிமிடங்கள் மௌனத்திற்கு பிறகு விறகுவெட்டி பேச ஆரம்பித்தான். ஒன்று நான் இந்த ஆபரணங்களையும் பொற்காசுகளையும் எடுத்துக்கொள்ள வேண்டும். அல்லது மன்னரை கொல்ல வேண்டும். அப்படித்தானே? நான் விரும்புவது இந்த பொற்காசுகளை யோ, ஆபரணங்களையோ அல்ல! என் மகனே போய்விட்டபிறகு இவற்றை வைத்து நான் என்ன செய்யப்போகிறேன்.

ஐயோ அப்படியென்றால் இவன் மன்னரை கொல்லப்போகிறான்



போலிருக்கிறதே, எல்லாரும் வெடவெடத்து போனார்கள்.

விறகுவெட்டி தொடர்ந்தான் நீங்கள் நினைப்பது போல நான் மன்னரைக் கொல்ல விரும்பவில்லை. அவர் அளிக்கும் பொன்பொருளையும் விரும்பவில்லை. நான் விரும்பியது எதுவோ அது கிடைத்துவிட்டது. தான் செய்த தவறு குறித்து மன்னர் மனம் வருந்தவேண்டும் என்று விரும்பினேன். அவரோ வருந்திக் கண்ணீர் விட்டதோடு பெருந்தன்மை யாக தனது உயிரையும் பதிலுக்கு

தியாகம் செய்ய துணிந்துவிட்டார். அது ஒன்றே எனக்கு போதும்.

மன்னரை தண்டிப்பதால் என் மகன் எனக்கு மீண்டும் கிடைக்கப் போவதில்லை. ஆனால், இந்த நாடு ஒரு நல்ல மன்னனை இழந்துவிடும். நான் அப்படி செய்தால் என் மகனின் ஆன்மாவே என்னை மன்னிக்காது.

அதே நேரம் நான் பொன்னையும் பொருளையும் பெற்றுக்கொண்டால் என் மகனின் உயிருக்கு நான் விலை பேசியது போலாகிவிடும். மன்னர் தான் செய்த தவறுக்கு உளப்பூர்வமாக மனம் வருந்தி சிந்திய கண்ணீரே போதுமானது. எங்களுக்கு வேறு எதுவும் வேண்டாம் என்று கூறி தன் மனைவியை அழைத்துக்கொண்டு தன் வழியே போய்விட்டான் விறகுவெட்டி.

ஒரு விறகுவெட்டிக்கு இப்படி ஒரு பெருந்தன்மையா, இப்படி ஒரு ஞானமா என்று வியந்துபோனார்கள் அனைவரும். அந்த மன்னன் தான் நாம். நாம் செய்யும் பாவங்கள் தான் அந்த கொலை. அந்த விறகுவெட்டி தான் இறைவன்.

இப்போது புரிகிறதா எப்படிப்பட்ட மனதுடன் பரிகாரம் செய்யவேண்டும் என்று. இப்படி செய்யும் பரிகாரங்கள் தான் பலனளிக்கும்.

ஒரு பரிகாரத்தை எதற்கு செய்கிறோம் என்றே தெரியாமல் அதை இன்று பலர் செய்வது தான் வேடிக்கை. பரிகாரம் என்பது ஒரு உபாயம் அவ்வளவே. அதுவே இறுதியானது அல்ல.

நீங்கள் எந்திரத்தனமாக செய்யும் எந்த பரிகாரமும் பலன் தரவே தராது.நீங்கள் எத்தனை கோடிகள் கொட்டிக் கொடுத்தாலும் சரி எத்தனை லட்சங்களுக்கு திருப்பணிகள் செய்தாலும் சரி, செய்த பாவத்திற்கு மனம்திருந்தி கண்ணீர்விட்டு மன்னிப்பு கேட்டாலொழிய உங்களுக்கு பரிகாரமோ, செய்த பாவங்களுக்கு மன்னிப்போ இறை நீதிமன்றத்தில் கிடைக்காது.

அடுத்த முறை என்ன பரிகாரம் செய்தாலும், நாம் செய்த குற்றத்திற்கு பிராயச்சித்தமாகத் தான் இதை செய்கிறோம் என்று உணர வேண்டும்.

கடந்தகால, முன்ஜென்ம தவறுக்கு வருந்தி,கண்ணீர் விட்டு இறைவனிடம் மன்னிப்பு கேட்கும் ஒருவர் எந்த மனநிலையில் இருப்பாரோ அதே மனநிலையில்தான், ஒருவர் பரிகாரம் செய்யவேண்டும். செயல் விளைவு தத்துவம் புரிதல் வேண்டும்.

மேற்கூறிய மன்னன் அந்த விறகுவெட்டி முன்பு தன்னை ஒப்படைத்த மனநிலையில் இருந்து பரிகாரம் செய்து பாருங்கள்.உடனடி பலன் நிச்சயம்! அதைத் தவிர இன்றைய நாளில் நீங்கள் செய்யும் அத்தனை பரிகாரமும் வீணே!

சாயிமகராஜ் குருவைதேடி
இணையத்தில் படிக்க...
www.saidhyanalaya.org

சாய் தியானா
வாட்ஸ் அப் நம்பர்
99418 16692

ஆதி வேர்!



உலகம் அனைத்தும் சாயிபாபா இறைவனே என உணர்ந்து கொள்ள ஆரம்பித்துவிட்டது! பிரபஞ்சப் பேராற்றலே பாபாவாக மண்ணில் உதித்தது என்பதை உணரும் காலமும் நெருங்கிவிட்டது. இந்த பூமியில் நம் கண்படாத இடத்திலும், காற்று தொடாத இடத்திலும் கூட பாபாவே நிறைந்திருக்கிறார் எனும் நிதர்சனம் வெளிப்பட ஆரம்பித்துவிட்டது.

நமது இந்த உடலுக்குள் நிகழும் இயக்கம் கூட பாபாவுக்கான நிறுவனமே! மதம் கடந்து, அறம் வளர்க்கும் எல்லா ஆசிரமமும் சாயி ஆலயம் தான். இந்த உலகம் முழுவதும் இறைவன் பாபாவின் பாதத்தில் விழும் காலம் வெகு தொலைவில் இல்லை!

நிச்சயம் நாம் பார்க்கலாம், அல்லது பார்ப்பதற்காக மீண்டும் பிறக்கலாம், இல்லையெனில், பாராத வண்ணம் பாபா பாதத்திலேயே இணையலாம்! எதுவாயினும் சாயி இயக்கம் இயங்கிக் கொண்டே இருக்கும்! அதன் உள் நோக்கம், வெளி நோக்கம் யாவும் உலக ஒற்றுமையே! நாம் பார்வையாளர்கள் மட்டுமே!

நம்மை வைத்து பாபா இயக்கலாம் ஆனால் நம்மால் எதுவும் இந்த உலகில் இயங்குவதில்லை! ஓர் ஆலமரத்தின் ஒரு கிளை மட்டும் உயர்ந்து நிழல் தரலாம்! எல்லாக் கிளைகளும் அந்த ஆலமரத்துக்கானதே! சூட்சுமம் என்னவெனில் எது வேராக ஆழம் போகிறதோ அதுவே கிளைகளாக நீண்டு, செழித்து வளர்ந்து நிற்கும்.

அடுத்த இதழில் ஆசிரியர் வெ.ஸ்ரீராம் அவர்கள் எழுதும் சாய் சரிதம் (கதை வடிவில்) விறு விறுப்பான தொடர் ஆரம்பம்.

ஸ்ரீ நாராயண தீர்த்த சுவாமிகள்

ஸ்ரீ நாராயண தீர்த்தர் ஒரு கர்நாடக இசை வல்லுனர். ஆந்திர மாநிலமான குண்டூர் மாவட்டம் வில்லத்தூர் என்ற கிராமத்தில் பிறந்தார். மங்களகிரிக்கு அருகாமையில் உள்ள காஜா என்ற இடத்தில் வாழ்ந்து வந்தார். கோவிந்த சாஸ்த்ருலு என்பது அவரின் இயற்பெயர். சரஸ்வதி மஹால் நூலகத்தில் உள்ள சான்றுகளின் படி அவருடைய காலம் 1650–1745 என அறிய முடிகிறது.

சிறுவயது முதலே வேத புராணங்களைக் கற்றறிந்த நாராயண தீர்த்தர் பல புண்ணிய சேத்திரங்களுக்கு பாத யாத்திரை செல்வதை வழக்கமாக வைத்திருந்தார். அப்படி ஒரு முறை புனித யாத்திரை சென்று திரும்பும் கோதாவரி நதியைக் கடக்கும் போது எதிர்பாராதபடிக்கு பெருவெள்ளம் ஏற்பட்டது.



கோதாவரி நதியின் அக்கரையில் இருக்கிறாள் அன்பு மனைவி.அவளைக் காணவேண்டும் என்ற ஆவல் பொங்கியதால் வெள்ளத்தை ஒரு பொருட்டாக மதிக்காமல் ஆற்றைக் கடக்க தீர்மானித்தார். அங்கேதான் இறைவனின் திட்டம் செயல்படத் தொடங்கியது. ஸ்ரீ நாராயண தீர்த்தர் வெள்ளப்பெருக்கில் சிக்கிக் கொண்டார். ஆற்று நீர் அவரை இழுத்துச் சென்றது. ஆனால் அவரது உள்மனம் சொல்லிற்று இன்னும் கொஞ்ச காலம் வாழவேண்டும்! உயிர் பிழைக்க வேண்டும். என்ன செய்யலாம்!

"ஆபத்சந்நியாசம்" ஏற்றுக்கொள்ளலாம்

ஆம் அதுவே சரி! ஆற்று நீரில் ஆபத்சந்நியாசம் ஏற்றுக்கொண்டார். எப்படியோ ஒருவழியாக வெள்ளத்தில் இருந்து உயிர் பிழைத்தார் தீர்த்தர்.

இச்சம்பவத்திற்குப் பிறகு ஸ்ரீசிவராம ஆனந்த தீர்த்தர் என்பவரிடம் தீட்சை பெற்றார். இறைவனின் அருளால்

புது வாழ்வு கிடைக்கப்பெற்றவருக்கு, "காவிரியின் கரைக்குச் செல்", என இறைவன் ஆணையிட்டான்.

தீர்த்தருக்கு வெகுநாட்களாகவே, காவேரிக் கரையின் கோவிந்த புரத்தில், வாசம் செய்யும் ஸ்ரீ போதேந்திர ஸ்வாமிகளைத் தரிசனம் செய்ய வேண்டும்! என்ற ஆசை ஒன்று மனத்தினுள் குடிகொண்டிருந்தது.

அதற்குத் தான் இந்த அருளாணையோ என்று இறைவனின் கட்டளையைச் சிரமேற்கொண்டு ஆந்திரத்தின் கோதாவரிக் கரையில் இருந்து செந்தமிழ் நாட்டின் காவிரிக் கரைக்கு விரைந்தார் தீர்த்தர்.

ஆயினும் சோகம் தான் மிஞ்சியது. ஸ்ரீ நாராயணர் கோவிந்தபுரத்தை அடைவதற்கு சில மாதங்களுக்கு முன்னதாகவே, ஸ்ரீ போதேந்திர சுவாமிகள் ஜீவ சமாதி எய்தியிருந்தார். சுவாமிகளைத் தரிசிக்கும் பேறு தனக்குக் கிட்டவில்லையே என்று மனம் பொறுக்காது அங்கேயே சுற்றித் திரிந்திருந்தார்.

வெகுநாட்கள் காவிரியின் கரையிலேயே மனம் போன போக்கில் அலைந்து திரிந்து கொண்டிருந்தார். நடுக்காவேரி என்னும் கிராமத்தில் இருந்தபோது தாங்கொணாத வயிற்று வலி ஏற்பட்டது. செய்வதறியாது திகைத்த தீர்த்தர் அவ்வூரில் இருந்த பிள்ளையார் கோயிலில் அன்றிரவு படுத்துக் கொண்டார்.

ஊர் உறங்கிற்று. தீர்த்தரும் உறங்க முற்பட்டார். ஆனாலும் வயிற்று வலி அவரை விடவில்லை. வேதனையான உறக்கத்தினூடாக கனவு ஒன்று. விடியற்காலையில் எந்த விலங்கைக் காண்கின்றனையோ, அதனைப் பின் தொடர்ந்து செல்!



திடுக்கிட்டு விழித்த தீர்த்தர் விடியும் வரை காத்திருந்தார். பொழுது புலரும் முன் அவருக்கு முன்பாக ஓர் பன்றி ஓடியது. பன்றியை தொடர்ந்து செல்வதா? இது என்ன சோதனை! இருந்தாலும், விரைந்து ஓடிய பன்றியினைப் பின் தொடர்ந்தார். வயிற்று வலியும் அவரைத் தொடர்ந்தது.

வரப்புகள், வாய்க்கால்கள், வயல்வெளிகள், இவற்றின் நடுவே சென்ற மண்சாலையில் பயணம் தொடர, பூபதிராஜபுரம் என்னும் சிற்றூரின் வெங்கடேசப் பெருமாள் திருக்கோயிலுக்குள் சென்று மறைந்தது அந்தப் பன்றி!

அந்த நொடியில் ஸ்ரீ நாராயண தீர்த்த சுவாமிகளின் வயிற்றுவலியும் மறைந்து போயிற்று. ஸ்ரீ வெங்கடேசப் பெருமாளை தரிசித்து அவ்வூரிலேயே தங்கினார் சுவாமிகள். ஸ்ரீ பால கிருஷ்ணனின் லீலைகளை நினைந்து, நாளும் நாளும் கான மழை பொழிந்தார் சுவாமிகள் இளமையிலேயே இசையறிவினைப் பெற்றிருந்ததால் நாட்டிய பதங்களுடன் கானங்கள் வெளிப்பட்டன.

திருக்கோயிலின் மண்டபத்தில் அமர்ந்து ஸ்வாமிகள் கானம் இசைக்கும் போது கருவறையில் பெருமாள் ஆனந்தக் களிப்புடன் நடமிடுவார். கூடவே இருக்கும் ஆஞ் சநேயர் அதற்கேற்றார்போல் தாளம் இசைப்பார்.

இதையறிந்த ஊர் மக்கள், இந்தக் காட்சியினைத் தாங்களும் கண்ணாரக் காண வேண்டும் என விழைந்தனர்.

தீர்த்தர் ஸ்வாமிகள் பெருமாளிடம் கானம் இசைத்து வேண்டுகோள் வைக்க, பெருமாளும் தனது திருப்பாதங்களில் சலங்கை கட்டி ஆடும் திருக்கோலத்தை ஊர் மக்களுக்கு காட்டியருளினார்.

ஸ்வாமிகள் வேங்கடவனின் தரிச னம் பெற்ற பூபதிராஜபுரம் இன்றைக்கு வரகூர் என்று வழங்கப்படுகின்றது. ஸ்ரீ நாராயண தீர்த்தர் அருளிய கீர்த்தனைகள் ஸ்ரீ கிருஷ்ணலீலா தரங்கிணி என்று போற்றப்படுகின்றன

தீர்த்தர் ஸ்ரீ கிருஷ்ணரின் தீவிர பக்தராக இருந்ததால், அவர் "தரங்காஸ்' என்ற நூலில் தன்னிச்சையான வெளிப்பாட்டைத் தொகுத்துள்ளார். ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி, அவரது மகத்தான இசை நூல், தரங்காஸ் எனப்படும் 12 அத்தியாயங்களில் பல ஸ்லோகங்களையும் க்ருதிகளையும் உள்ளடக்கிய ஒரு இணையற்ற இசைக் கட்டுரையாகும்.

தாளத்தின் செழுமையும் அழகும், ஒன்பது 'ரசங்களை' தூண்டி, இந்திய பாரம்பரிய நடனம் மற்றும் இசையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். தரங்காக்கள் ஸ்ரீ கிருஷ்ணரின் வாழ்க்கை மற்றும் சிறுவயது குறும் புகளை சித்தரித்து, "ருக்மணி கல்யாணம்" என்ற மங்களகரமான திருமணத்தில் முடிவடைவது வரை தொகுக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணி இயற்றி ஆனந்த வெள்ளத்தில் ஆழ்ந்திருந்த ஸ்வாமிகள் தனது இறுதி நாளினை உணர்ந்தார், அப்போது அவருக்கு திருப்பூந்துருத்திக்குச் செல்க! என்ற இறைவனின் திருவாக்கு கேட்டது.



அதன்படி அருகில் இருக்கும் திருப்பூந்துருத்தி என்ற ஊருக்கு வந்தார். அங்கே குடமுருட்டியின் கரையின் விரிந்து பரந்திருந்த மா மரத்தின் அருகில் ரிஷபாரூடராக சிவ தரிசனம் கண்டு மகிழ்ந்தார். உள்ளம் நெகிழ்ந்தார். சிவபெருமானின் மீது கீர்த்தனம் பாடினார்.

இறையருள் கூடி நின்றது. மாசி மாதம். கார்த்திகை நட்சத்திரம். சுக்ல பட்சத்தின் அஷ்டமி நாள் 1745 ஆம் வருடம், விரிந்து பரந்திருந்த மாமரத்தின் குளிர் நிழலில் ஸ்ரீ நாராயண தீர்த்தர் ஜீவ சமாதி எய்தினார். கோதாவரிக் கரையில் தோன்றிய ஸ்ரீ நாராயண தீர்த்த ஸ்வாமிகளின் பெருவாழ்வு காவிரிக் கரையில் பூரணத்துவம் எய்தியது.

ஸ்வாமிகளின் வரலாற்றுச் சான்றுகள் ஸ்ரீ கிருஷ்ண லீலா தரங்கிணியின் பிரதிகள்,தஞ்சை சரஸ்வதி மஹால் நூலகத்தில் இருப் பதாகச் சொல்கின்றார்கள்.காவிரியின் கிளை நதியாகிய குடமுருட்டியின் தென்கரையில் திருப்பூந்துருத்தியில் பசுமையான சூழல்.மரங்கள் சல சலக்கும் ஒலி. பறவைகளின் நாதம்.

வடக்கு நோக்கிய திருக்கோயிலாக உள்ளது அதிஷ்டானம். முன் மண்டபத்தில் ஸ்ரீ விநாயகர். சுவாமி களின் அதிஷ்டானம் கருவறையாக நாலடி பள்ளத்தினுள் உள்ளது. சுவாமிகள் ஸ்ரீ கிருஷ்ண கானம் பாடித் திளைத்தாலும்

முக்தி எய்தும்போது சிவதரிசனம் பெற்றவரல்லவா! அதனால் அதிஷ்டா னத்தின் முன்பாக நந்தி வாகனம். அருகில் தொன்மையான நாகலிங்க மரமும், மாமரமும் இருக்கின்றன. அதிஷ்டானத்தின் மண்டபச் சுவரில் ஸ்ரீகிருஷ்ண லீலா தரங்கிணி கீர்த்தனைகள் சலவைக் கற்களில் பதிக்கப்பட்டுள்ளது. அதிஷ்டானம் தற்போது குன்றக்குடி ஆதீனத்தின் பராமரிப்பில் உள்ளது.

ஸ்வாமிகளின் குருபூஜை ஆண்டுதோறும் வெகு சிறப்பாக நடைபெறுகின்றது. இவ்வாண்டு சென்ற மாசி மாதம் 3 ஆம் தேதி (15.2.24) வியாழக்கிழமை அன்று தொடங்கி மூன்று நாட்கள் சுவாமிகளின் 278 வது ஆராதனை விழாவும், இசை வித்வான்கள் பங்கேற்கும் 60 ஆவது தரங்க இசைவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 8.30 மணி அளவில் வேத பாராயணத்துடன், இசைப்பேருரையுடன் ஆரம்பித்து, சம்பிரதாய சுத்தமாகப் பாடும் வித்வான் களின், கிருஷ்ண லீலா தரங்கிணிகளைக் கொண்ட நிகழ்ச்சிகளும், மற்றும் ப்ரவசனம், நாமசங்கீர்த்தனம், நாதஸ்வரம், உபன்யாச நிகழ்ச்சிகளும், தொடர்ந்து நடைபெற்று மாசி மாதம் 5 ஆம் தேதி சுக்ல அஷ்டமி திதி (17.02.24) சனிக்கிழமை அன்று ஆராதனையுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

திருப்பூந்துருத்தி தொன்மையான திருத்தலம். இங்கு தான் அப்பர் ஸ்வாமிகள் திருமடம் அமைத்து ஆண்டுகள் பலவாக மக்கட் தொண்டு செய்தார். அப்பர் ஸ்வாமிகளின் திருமடமும் சிவாலயத்தை அடுத்து அமைந்துள்ளது.

தஞ்சை, கண்டியூர் திருக் காட்டுப்பள்ளி வழித்தடத்தில் 12 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது

திருப்பூந்துருத்தி. திருப்பூந்துருத்தியில் இருந்து திருக்காட்டுப் பள்ளி செல்லும் வழியில் 5 கி. மீ.தொலைவில் தான் சுவாமிகள் இருந்து இன்புற்ற வரகூர் உள்ளது.

ஸ்வாமிகளுக்கு அருளாணை கிட்டிய நடுக்காவேரி கிராமமும் இதே வழியில் தான் உள்ளது. தஞ்சை பழைய பேருந்து நிலையத்திலிருந்து திருப்பூந்துருத்திக்கு அடிக்கடி பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

திருப்பூந்துருத்தி வழியாக திருக்காட்டுப்பள்ளிக்குச் செல்லும் நகரப் பேருந்துகள் மற்றும் கல்லணைக்குச் செல்லும் புற நகர் பேருந்துகள் என பேருந்து வசதிகள் தாராளம். கும்பகோணம், திருவையாறு வழியாகவும் திருப்பூந்துருத்தி வரலாம்.

மன அமைதியை நாடுகின்றவர்கள் சுவாமிகளின் தரிசனம் காணுங்கள்.

கதவுகள் திறக்கட்டும்



பாரதத்தின் பல பண்டைய ஆவணங்கள், கலைப் பொக்கிஷங்கள் பலவும் யார் எழுதியது என்று தெரியாமல் அப்படியே புதைந்து போயிருக்கின்றன! அப்படியே விட்டிருந்தால் வேதங்களை தொகுத்தது வியாசர் என்றுகூட தெரியாமலேயே போயிருக்கும்!

வியாசர் என்பவர் இனம் கடந்தவர்! எந்த இனத்தில் பிறந்தாலும் ஞானம் அடையலாம் என்பதற்கான உதாரண புருஷர்! ஆக ஆன்ம ஞானம் வியாபார நோக்கம் அற்றது! ஞானம் நம்மை தூங்க வைப்பதில்லை. அது தட்டி எழுப்புகிறது! நம் அகந்தைக்கு அது தூபம் போடுவதில்லை! அகந்தையை சுக்கல் நூறாக உடைத்தே போடுகிறது!

ஆக மனம் பக்குவம் அடைய, பக்குவம் அடைய, அது கனிய ஆரம்பிக்கிறது! அது குழந்தையின் கால்களில் கூட நம்மை விழ வைக்கிறது! தவறுகளை தைரியமாக ஏற்றுக்கொண்டு, பொது வெளியில் நம்மை மன்னிப்பு கேட்க வைக்கிறது! உண்மையான புகழ் என்பது பாரபட்சமற்ற நேர்மையே! அதுவே பகவான் பாபா வகுத்த ஆன்மீகம்!

கதவு திறந்தால் தான் வெளிச்சம் வரும் ! வெளிச்சம் வந்தால் தான் தீயவைகள் வெளியேறும்! எத்தனை நாளைக்குத்தான் நாம் மனதை பூட்டியே வைத்திருக்கப் போகிறோம்? நமது மனம் தான் பகவான் பாபா வசிக்கும் துவார காமாயி! என்பதை உணருங்கள்.

இராமகிருஷ்ண தம்பிரான்

கடந்த 14.2.24 அன்று குடந்தை ஸ்ரீ மொளனகுரு ஆஸ்ரமத்திற்கு, நமது இதழின் ஆசிரியரும், எனது குருநாதருமாகிய திரு. ஸ்ரீராம் அவர்களுடன் செல்லும் பெரும் பேறு அடியேனுக்குக் கிட்டியது.

மொளனகுரு சுவாமி களை தரிசித்துவிட்டு, ஆஸ்ரம நிர்வாகி திரு. வைத்தியநாதன் அவர்களை சந்தித்து உரையாடிக் கொண்டிருந்தபோது. ஆஸ்ரமத்தில் தங்கியிருந்த 105 வயதான ஒரு பெரியவரை எங்களுக்கு அறிமுகப்படுத்தினார்.

அவருடன் பேசியபோதுதான் அவர் யார், அவருடைய அனுபவம் என்ன என்பது எங்களுக்குப் புரிந்தது. திருநெல்வேலி, சேரன்மகாதேவியை பூர்வீகமாகக் கொண்ட திரு. இராமகிருஷ்ண தம்பிரான் என்பது அவருடைய பெயர்.

தற்போது 105 வயதாகும் அவர் இன்றும் தனது வேலைகளை தானே செய்து கொள்வதோடு மட்டுமல்லாது, ஆலயத்திற்கும் சிறுசிறு வேலைகளை செய்து கொடுத்துக்கொண்டு சுறு சுறுப்பாக வலம் வரு கின்றார்.

அதுமட்டுமின்றி, ஆலயத் திற்கு வரும் பக்தர்களின் பிரட்சனைகளுக்கு ஆறுதல்கூறி அவர்களுக்கு அருள்வாக்கும் அளிக்கின்றார். அவர்கூறுகின்ற "வாக்கு" அப்படியே நடப்பதாக பக்தர்கள் நம்புகின்றார்கள்.

சிறுவயதிலேயே ஆன்மீக தேடுதலில் காரணமாக, திருவாவடுதுறை ஆதீன மடத்தில், 15 வருடங்கள் கடுமையான ஆதீனப் பயிற்சியை எடுத்துக் கொண்டு, இராமநாதபுரம் ஸ்ரீ மொளனகுரு ஆஸ்ரமத்தில் 10 ஆண்டுகள் ஆதீனமாக இருந்துள்ளார்.

திருவாவடுதுறையில் பயிற்சி பெற்ற போது, 1947 ஆம் வருடம் நமது இந்திய நாடு சுதந்திரம் அடைந்து நேருவின் தலைமையில் புதிய அரசு அமைந்த போது, திருவாவடுதுறை ஆதீனம் சார்பாக செங்கோல் எடுத்துச் சென்று அன்றைய பாரதப் பிரதமர் திரு. நேருஜி அவர்களிடம் கொடுத்த இருவரில் இவரும் ஒருவர் என்பதை அறிந்தபோது வியப்பில் ஆழ்ந்தோம்.

அதைப்பற்றிய அனுபவங்களை எங்களிடம் பகிர்ந்து கொண்டபோது பழைய நினைவுகளில் மூழ்கினார் திரு. இராமகிருஷ்ண தம்பிரான். தன் வாழ்நாளில் அநேக மகான்களையும், ஆதீன கர்த்தாக்களையும், சந்தித்த வர். எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருக்கும் அரசியலை தாக்குபிடிக்க முடியாமல் தற்போது தனது வயதான காலத்தில், குடந்தை ஸ்ரீ மொளன குரு சுவாமிகளே கதி என இங்கு வந்து சரணடைந்து விட்டார்.



"காணப்படுவதெல்லாம் அசத்தியம், காண்பதுவே சத்தியம்" என்பதற்கிணங்க தன் வாழ்நாளை "காண் பதுவே" வாக வாழ்ந்து கழித்துவிட்ட தம்பிரான்



அவர்களின் இறுதிக்காலம் ஆனந்தமாக கழியவேண்டி "அத்வைதா ஆனந்தம்" ஸ்ரீ மொளன குரு சுவாமிகளை வேண்டித் துதித்துப் பிரார்த்திக்கின்றோம்.

ஆஸ்மர நிர்வாகி திரு. வைத்திய நாதன் அவர்கள் தம்பிரான் அவர்களை தனது பாதுகாப்பிலேயே வைத்து கவனித்துக்கொள்கிறார். உங்களது அலுவலுக்கிடையே, தம்பிரானை கவனித்துக்கொள்வது சிரமாக இல்லையா என்றதற்கு, அவரது வேலையை அவரே செய்து கொள்கிறார். தவிர ஆலயத்திற்கு தன்னால் இயன்ற வேலையையும் செய்து தருகிறார்.

அவர் என்னிடம் எதுவும் எதிர்பார்ப்பதில்லை. நானும் அவருக்கு எதுவும் செய்வதில்லை. அதனால் அவர் இங்கிருப்பதில் எனக்கொன்றும் பிரட்சனை இல்லை என்கிறார். தன்னலம் கருதா சேவை செய்துவரும் திரு. வைத்தியநாதன் அவர்களையும் வாழ்த்த வயதில்லை வணங்கிப் பணிகின்றோம்.

குரு வாழ்க! குருவே துணை!

– அகஸ்டின்

முட்டுக்கட்டை

ஒரு செயலில் நாம் எந்த தவறுமே செய்யாத போதும், அது நம்மை நோக்கி பிரச்சனையாக திரும்பினால் அது முற்பிறவி களின் வினைப் பயன் என்று உணர வேண்டும்.



இதை நாம் மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்கிற போதே, நம்மை நோக்கி வரும் பிரச்சனைகளில் பாதி பிரச்சனைகள் தீர்ந்து விடும்! மீதி பிரச்சனையின் வீரியத்தை பகவான் பாபா நிச்சயம் குறைப்பார்!

இதில் நாம் சந்தேகப்பட வேண்டிய தில்லை! எந்த நிகழ்வின் மீதும் நமக்குள்ள பற்றை, ஆர்வத்தை, கைவிட்டாலே போதுமானது! எந்த அதிர்ச்சியும் நம்மை பாதிப்பதில்லை! நாம் ஏற்கனவே தீர்மானித்து வைத்தி ருக்கிற கற்பனை உடைகிற போதே அதிர்ச்சி ஏற்படுகிறது!

எதுவுமே தெரியாமல் நாம் எதையாவது கற்பனை செய்வதை விட்டுவிட்டு "எனக்கு எதுவும் தெரியாது சுவாமி! அனைத்தையும் கவனித்துக் கொள்! என்று நமது எண்ணங்களையும் சேர்த்து பாபாவின் பாதங்களில் ஒப்படைப்பது தான் ஒரே தீர்வு!

ஆனால் நம்முடைய ஒரே பிரச்சனை என்ன தெரியுமா?

நமக்கு எல்லாம் தெரியும் என்ற மிதப்பு தான்! அது தான் பாபாவிடம் சரணாகதி அடைய விடாமல் நம்மை தடுக்கிறது! "அது அப்படித் தான். இது இப்படித் தான்!" என்ற நமது முன்கூட்டிய மூடத்தனமான தீர்மானங்கள் தான் நமக்கு பெரிய முட்டுக்கட்டையே!

ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்

(சென்ற புத்தக வெளியீட்டு விழாவில் திரு. அகஸ்டின் அவர்களின் சொற்பொழிவு)

குருதாழ் வணங்கி தொடங்குகிறேன்,

குருவிடம் எம்மை அழைத்து வந்து அறிமுகப்படுத்திய அன்பு நண்பர் திரு வெங்கடேஷ் அவர்களுக்கு நன்றி கூறி எமது சிறு உரையை வரைகிறேன்.

தாழிடா சிரிப்பு, தாழிட்ட சினம், இவ்விரண்டிற்கும் உரியவராக பாராயண பகலவன் திரு.சுந்தர் சாய் அவர்களுக்கும், வற்றா ஊற்றை போல் வற்றா உதியை என்னேரமும் சாய் சொந்தங்களுக்கு அளித்துவரும் திரு. உதிமூர்த்தி சாய் அவர்களுக்கும், சித்தர்களை பித்து பிடித்தது போன்று ஆராய்ந்து வரும் திரு.வெங்கடேசன் அவர்களுக்கும்,

திருமதி.மாதங்கி பாலாஜி அவர்களுக்கும் மற்றும் சாய் சொந்தங்களுக்கும் எமது பணிவான வணக்கத்தை தெரிவித்துக்கொண்டு, "ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்தின்" வளர்ச்சிக்காக உங்களிடம் சில செய்திகளை பகிர்ந்து கொள்கிறேன்.

இச்சபையில் தற்போது சத்சங்கம், அன்னதானம், ஸ்ரீ சாய் மகராஜ் குருவை தேடி ஆன்மீக மாத இதழ் ஆகிய மூன்று பணிகளும், குரு ஸ்ரீராம் அவர்களால் மிக சிறப்பாக நிகழ்த்தப் பட்டு வருகிறது . கடந்த பத்தாண்டுகளாக சாய் பக்தர்களின்



ஆன்மீக சந்தேகங்களுக்கும், வாழ்க்கை சிக்கல்களுக்கும் தீர்வளிக்கும் விதமாக ஞாயிறு தோறும் சென்னை அயனாவரத்தில், பிரதிபலன் பாராமல் காலை 6 மணியில் இருந்து பகல் 12 மணிவரை சத்சங்கம் நிகழ்த்தி வருகின்றார்.

அடுத்ததாக அன்னதானம். அவரே சமையல் செய்து, அவரே அதை பொட்டலம் கட்டி அவருடைய வாகனத்திலேயே எடுத்துக்கொண்டு இல்லாதவர்க்கும் இயலாதவர்களுக்கும் இருக்கும் இடம் தேடி சென்று உணவு பொட்டலங்களை கொடுத்து வருகிறார். அவரின் அன்னதானப் பணியினை காணும் போது நாமும் இப்பணியில் கலந்து



கொள்ள வேண்டும் என்ற எண்ணம் எழும். ஆனால் நேரமின்யால் கலந்து கொள்ளமுடியாமல் போய்விடும்.

அடுத்ததாக புத்தக பணி, மிகவும் சிரமமான செயல் அனைவரையும் கவர்ந்ததாக இருக்க வேண்டும், படிக்க எளிமையாக இருக்க வேண்டும், உண்மைத்தன்மை இருக்க வேண்டும், ஆன்மீகச் சாயலில் இருந்து மாறாமல் இருக்க வேண்டும், சுவாரஸ்யம் நிறைந்ததாக இருக்க வேண்டும், குறிப்பாக மாதம் தவறாமல் வெளிவர வேண்டும் என்பதை ஆசிரியர் மட்டுமல்ல, தொடர்ச்சியாக இதழை வாசிப்பவர்களும் இம்மாதிரியான விஷயங்களை உணர்ந்திருப்பார்கள்.

மேலும் ஒவ்வொரு மாதமும் புத்தகம் வெளியீட்டு விழா செலவு, சந்தாதாரர்களுக்கு தபாலில் அனுப்பும் பணி என எண்ணற்ற பணிகளை குரு அவர்களே தனி ஒரு ஆளாக கவனித்து வருகிறார். ஒவ்வொரு பிரதி மாத புத்தக வெளியீட்டு விழா விலும் குரு அவர்கள் கூறுவார்கள். புத்தகத்திற்கு என்று நான் ஒரு ரூபாய் கூட செலவு செய்யவில்லை. ஏனென்றால் இது பாபாவின் வேலை. ஆகவே அனைத்தையும் அவரே பார்த்துக் கொள்கிறார். என்று கூறுவார். உண்மையும் அதுதான். குருவுடன் பயணிப்பவருக்கு மட்டுமே அது புரியும்.

எனக்கு முன்னால் பேசிய திருமதி. மாதங்கி பாலாஜி அவர்கள் குருவின் செயல்பாடுகளை மிக அருமையாகவும் இலகுவாகவும், எளிய நடையிலும் எடுத்துரைத்தார். அதில் குரு அவர்களை நீங்கள் யாரென்று சரியாக புரிந்து கொள்ளவில்லை. அவரும் தான் யார் என்பதை முழுமையாக வெளிப்படுத்தாமல் முகமூடி அணிந்து கொண்டு செயல்படுகிறார்.

சில நேரங்களில் அதை கலைந்து தன்னை வெளிபடுத்துகிறார். அதை நான் உணர்ந்துள்ளேன். ஆகவே நீங்கள் அனைவரும் அவரை உணர்ந்து கொள்ளுங்கள் என்று மிக மிக அழகாக எடுத்துரைத்த மாதங்கி பாலாஜி அவர்களுக்கு நன்றி சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆனால் குரு அவர்கள் எந்த முகமூடியும் அணியவில்லை. மாறாக நாம் தான் லௌகீகம் எனும் முகமூடியை அணிந்திருக்கிறோம். அதனால்தான் அவர் யார் என்பதை அறியமுடியவில்லை. நல்ல வேலை திருமதி.மாதங்கி பாலாஜி அவர்கள் லௌகீக முகமூடியை கழட்டி விட்டதால் குரு யார் என்பதையும் அவரின் செயல் பாடுகள் எதை

நோக்கியிருக்கிறது என்பதையும் புரிந்து கொண்டு அதை இங்கு எடுத்துரைத்ததை நினைத்து மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

குரு ஸ்ரீராம் அவர்களின் சேவையினை நாம் அனைவரும் நன்கு உணர்வோம். கடந்த பத்து ஆண்டுகளாக, பகவான் சாயி நாதரின் வழிகாட்டுதலின்படி எத்தனையோ அன்பர்களுக்கு அவர்களின் தீர்க்கமுடியாத குடும்ப பிரட்சனைகளையும், நோய் நொடி களையும், மனக்கஷ்டங்க ளையும், தன்னுடைய குரு பக்தியினாலும், தவ ஆற்றலினாலும் தீர்த்து வைத்தி ருக்கின்றார்.

அதுமட்டுமின்றி,
நூற்றுக்கணக்கான தொண்டர்களுக்கு, யோகா, தியானம் ஆகியவற்றை பயிற்றுவித்து மெய்ஞானப்பாதையில் வழிநடத்திக் கொண்டிருக்கின்றார் நமது குரு அவர்கள்.

ஆனால் மேற்கண்ட சேவைகளுக் காக அவர் ஏற்படுத்திய "சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்" வளர்ச்சி அடைந்திருக்கிறதா என்றால் இல்லை என்று தான் கூற வேண்டும்.

தற்சமயம் மேற்படி சேவைகளை குரு அவர்கள் செயல்படுத்தும் இட மானது வாடகை கட்டிடம் என்பதும், அளவில் மிகச்சிறியது என்பதும் இங்கே குறிப்பிடத்தக்கது. அதன் மூலம் சொற்ப நபர்களே பலன்பெறக்கூடிய அளவிற்கு இருக்கின்றது.

எனவே இப்பீடத்தின் வளர்ச்சி அனேக நபர்கள் பலன்பெற கூடிய வகையிலும் இருக்க வேண்டும் என்பதற்காக, சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடத்திற்காக குறைந்தது 30 சென்ட் அளவில் ஓர் இடமும்,



அதில் தியான மண்டபமாக ஓர் கொட்டகையும், அன்னதானத் திற்காக ஓர் கொட்டகையும், அமைத்து பீடம் செயல்பட குறைந்தபட்ச தொகையாக ரூபாய் ஐம்பது (50) இலட்சம் ஆகும் என்றும், அதற்காக இந்தத் திட்டத்தை வகுப்பதன் மூலம் எளியோரும், வலியோரும், சமநிலை யில் பயன்பெறக்கூடிய "குருகுல கல்வியை" பெரும்படி "ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம்" செயல்படும்.

இத்திட்டத்தை "படப்பை தியானக் குழு" சார்பாக தீர்மானித்து குருவின் ஒப்புதல் பெற்று, தங்களிடதில் பகிர்ந்து கொள்வதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறோம். ஏனென்றால் அனைவரின் ஒத்துழைப்பு இல்லாமல் இப்பெரிய காரியம் நடைபெறாது. நீங்கள் உங்களால் முடிந்த அளவு தண்ணீர் ஊற்றுவீர்கள் என்ற நம்பிக்கையோடு விதை விதைத்துள்ளோம். நிச்சயமாக விரைவில் ஸ்ரீ சாய் தியானாலயா



ஆத்ம ஞான பீடம் பலர் பயன்படும்படி விருட்சமாக வளர்ந்து நிற்கும்.

குரு வாழ்க! குருவடி சரணம்!

திரு. அகஸ்டின் அவர்கள் சொற்பொழிவாற்றியவுடன் அங்கேயே, ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைப்பதற்காக முதல் காணிக்கையாக, சென்னை ராயப்பேட்டை, திரு. சுந்தரவடிவேலு அவர்கள் ரூ.3000 அளித்தார்கள்.

அவரைத் தொடர்ந்து, திரு. அய்யாகண்ணு குரோம்பேட்டை அவர்கள் ரூ.5000. திரு. சாந்தமூர்த்தி பாஞ்சாலி போரூர் தம்பதியினர் ரூ.1000. அளித்தார்கள். மூவருக்கும் எங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவிக்கின்றோம்.

ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைப்பதற்கு உங்களது மேலான ஆதரவை நாடுகிறோம். காணிக்கை அளிக்க விரும்பினால் "சாய் தியானாலயா" ஜி பே எண்: 9941816692 மேலும் விபரங்களுக்கு திரு. அகஸ்டின் (97103 33503) அவர்களை தொடர்பு கொள்ளவும்.

நன்றி!

– ஸ்ரீ சாய் தியானாலயா ஆத்ம ஞான பீடம் அமைப்புக் குழு. சென்னை 23.


குடந்தை சாதனா நிகேதனில் இருபெரும் விழா

காவிரிக்கரையில் ஓர் பரமஹம்சர், சற்குருநாதர், பூஜ்யஶ்ரீ, ஶ்ரீ இராமாசாது அவர்களின் 129 வது ஜெயந்தி விழா கடந்த 14.2.24 புதன்கிழமை அன்று கும்பகோணம், கீழக்கொட்டையூர், ஶ்ரீ இராமாசாது தியான மண்டபம், சாதனா நிகேதனில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

காலை 6 மணிக்கு திருவருட்பா அகவல் பாராயணமும், 9.30 க்கு அபிசேக ஆராதனைகளும், 10.30 க்கு திருவண்ணாமலை சுவாமி மாத்ருசேவானந்த மகராஜ் அவர்களது பஜனையும்,11.30 க்கு ஶ்ரீ லலிதா சகஸ்ரநாம மகா அர்சனையும், மகா தீபாராதனை, புஷ்பாஞ்சலி, குருவந்தனமும், மாலை 5.30 க்கு ஶ்ரீ லலிதா சகஸ்ரநாம பாராயணமும் 6.00 மணிக்கு மங்கள ஹாரத்தியும் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சென்னையில் இருந்து எங்களுடன் வந்திருந்த சோதிடரும், புரோகிதருமான திரு. ராகவேந்திரன் அவர்கள் மிகச்சிறப்பாக ருத்ரம் பாடினார்கள். விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள் அனைவருக்கும் மிகச்சிறப்பாக காலை சிற்றுண்டியும், மதியம் உணவும் வழங்கப்பட்டது.

ஶ்ரீ ஷண்முகானந்த ஆஸ்ரமம், மற்றும் வள்ளலார் கல்வி அறநிலையங்களின் நிறுவனர், தவத்திரு. இராமதாஸ் அண்ணா அவர்களின்



8 வது குருபூஜை கடந்த 22.01.24 திங்கட்கிழமை குடந்தை கொட்டையூர் சாதனா நிகேதனில் அமைந்திருக்கும் அவரது சமாதித் திருக்கோவிலில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

தவத்திரு அண்ணா அவர்களின் மூன்று குருநாதர்களில் பூஜ்யஶ்ரீ இராமாசாது அவர்கள் தன் உடல் மறையும் வரை அண்ணாவுடனே இருந்தவர்கள். இருவருடைய சமாதித் திருக்கோவிலும் சாதனா நிகேதனில் அருகருகே இயற்கை சூழலுடன் எழில்மிகுந்த தோற்றத்துடன் அமைதி யாக அமைந்திருக்கின்றது.





பரபரப்பான நகர சூழ்நிலையிலும், ஆஸ்ரமத்திற்குள் நுழைந்தால் ஆழ்ந்த அமைதி நிலவுவதை நம்மால் நன்றாக உணரமுடிகின்றது. ஏனென்றால் இருபெரும் சற்குருநாதர்களும் ஒருங்கே, அருகருகே சமாதி கொண்டு தவமிற்றிக்கொண்டுள்ளார்கள் அல்லவா?


நாங்கள் வள்ளல் பெருமானின் வழிவந்தவர்கள் என்பதை நொடிக் கொருதரம் நிரூபிப்பது போல் ஆஸ்ரம நிர்வாகிகள், தொண்டு செய்யும் தொண்டர்கள் என அனைவரும், ஆஸ்ரமத்திற்கு வரும் அன்பர்களை முகமலர்ச்சியோடு வரவேற்று உபசரிப்பதில் அன்பு, சேவை, அமைதியை நாம் காண முடியும்.

அசைவை நிறுத்து! ஆனந்தம் வெளிப்படும்! என்ற ஸ்ரீ இராமசாது அவர்களின் தத்துவத்திற்கிணங்க, சுவாமிகளின் தியான மண்டபத்தில் அமர்ந்து கண்களை மூடினால் போதும் தானாக "அசைவு நின்று ஆனந்தம் பொங்கும்". சாதனா நிகேதனில் நிலவும் ஈர்ப்பு சக்தி அத்தகையது. அள்ளி அள்ளி பருக கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

எண்ணம், சொல், செயல், மூன்றிலுமே தொண்டு, தொண்டு,







தொண்டு என்று தொண்டிற்கெனவே வாழ்ந்த தவத்திரு. அண்ணா அவர்களின் வழிநின்று குருவின் நினைவினைப் போற்றி, குருவின் தாழ் பணிந்து வணங்குகிறோம்.

குடந்தை செல்லும் வாய் பிருப்பவர்கள் கண்டிப்பாக "சாதனா நிகேதனம்" செல்லும் வாய்ப்பை தவறவிடாதீர்கள். தன்னை அதிகம் வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாத இரண்டு மாபெரும் மகான்கள் வாழ்ந்து, மனித குலத்திற்கு மகத்தான சேவை செய்து, சமாதி கொண்டு தவமியற்றிவரும் அற்புதத்தலம். வாழ்க்கையில் ஒருமுறையேனும் தரிசித்து வாருங்கள். குறைகள் அகன்று வளங்கள் கூடும்.

குடந்தை பேரூந்து நிலையத்தில் இருந்து சுவாமிமலை செல்லும் பேரூந்தில் ஏறி கீழக்கொட்டையூர், வள்ளலார் கல்வி நிலையம் என்று கேட்டு இறங்கினால் கல்வி நிலையத்திற்கு பின்புறம் உள்ள ஆஸ்ரமத்தை அடையலாம்.

ஆஸ்ரம முகவரி:

சாதனா நிகேதன்,
ஸ்ரீ இராமார்ப்பணம் டிரஸ்ட்,
வள்ளலார் கல்வி அறநிலையங்கள்,
கீழக்கொட்டையூர்,
கும்பகோணம் 612002.

"சாயி ரத்தினம்" அண்ணா சாகிப்

சாய் பக்தர்களில் ரத்தினமாகத் திகழக்கூடிய இவர் 1851 இல் தாணுசாலை என்னும் இடத்தில் பிறந்தார். இவர் தனது 81 வது வயதில்1931 ல் இயற்கை எய்தினார். தனது இறுதி மூச்சுவரை நல்ல நினைவுடன் இருந்தார். அவர் தனது அந்திம காலம் நெருங்கிவிட்டதை அறிந்ததாகவே தோன்றுகிறது.

அவர் தம் குடும்பத்தினர் அனைவரையும் வரவழைத்து சாயி பாபாவின் ஆரத்தியை பாடச் சொன்ன தோடு சாயி நாமசெப பாராயணமும், செய்யக் கூறினார். அவரது இறுதி ஆசை அதுவாகவே இருந்தது.

அண்ணாசாகிப் மராத்தி மொழியில் ஏழாம் வகுப்பு வரை கல்வி பயின்றார். அவரது கண்களில் ஏற்பட்ட பிரட்சனையினால் அத்துடன் அவர் படிப்பை விட நேர்ந்தது. ஆனால் புத்தகங்கள் படிப்பதற்கான தாகம் அவரிடம் தணியவில்லை. அவரது வீட்டில் ஏராளமான புத்தகங்களை கொண்ட ஒரு நூலகமே இருந்தது.

அதில் சமயம் சார்ந்த ஏராளமான நூல்கள் சேகரிகப்பட்டிருந்தன. ஒரு சமூக ஆர்வலராக, சமூக சேவகராக, ஒரு கல்வியாளராக, சமூகத்திற்கு பயனளிக்கும் வகையில் அவர் தன் வாழ்நாளை செலவிட்டிருந்தார். மற்றவர்களிடம் பணிபுரியும் அடிமைத் தொழில் மீது கொண்ட வெறுப்பால் அவர் விவசாயத்தைத் தேர்ந்தெடுத்தார்.

தனது பண்ணை விளைச்சலில் இருந்து வரும் தனது பங்கு தானியங்களை பல்வேறு நிறுவனங்க ளுக்கும், கோவில்களுக்கும், இல்லாதவர் களுக்கும், அன்ன தானத்திற்கும் வழங்கினார்.

சீரடி சாய்பாபா சனஸ்தானும், சாயிலீலா இதழும் அவருக்கு மிகவும் பிடித்தமானவை. சாயி லீலா இதழின் முதல் இதழ் வெளியிடப்பட்டதில் இருந்தே அவர் தொடர்ந்து அதன் சந்தாதாரராக இருப்பதோடு மற்றவர்களையும் சந்தாதாரர்களாக சேர்க்க முற்படுவார்.

அவர் சாயிலீலாவின் ஒவ்வொரு இதழையும் தேதி வாரியாக மிகப் பாதுகாப்பாக சேகரித்து வைத்துள்ளார் என்பதை சொல்லத் தேவையில்லை. மேலும் அவர் திருமணம், மற்றும் ஏனைய நிகழ்ச்சிகளை சாய்லீலா இதழில் விளம்பரப்படுத்துவதன் மூலம் அதன் வெளியீட்டிற்கான தொகையை செலுத்துவார்.

அது அவருக்கு மிகவும் மகிழ்ச்சியை அளித்ததோடு, இதழுக்கு தேவையான நிதி கிடைக்கப் பேருதவியாக இருந்தது. அடிக்கடி அவர் பாபாவின் நெருங்கிய பக்தரான தேவ் என்பவரின் மூலமாக சீரடி சாய்பாபா சமஸ்தானுக்கு நன்கொடைகளை அனுப்பி வைப்பார்.

சீரடியில் சமஸ்தானால் கொண் டாடும் ஒவ்வொரு விழாக்களுக்கும் நிதியை ஒதுக்கி எடுத்து வைத்து சமயத்தில் அதை சமஸ்தானுக்கு அனுப்பி வைப்பார்.

சாயலீலா இதழுக்கு அவர் தன் பெயருக்கு ரூபாய் 100 செலுத்தி சந்தாதாரராகி இருந்தார். பிறகு தன் மகன்கள் ஸ்ரீ கிருஷ்ண ஜனார்த்தன், கேஷவ் மகாதேவ், ஹரிபாவ் கார்னிக் ஆகிய மூவருக்காகவும் தலா நூறு ரூபாய் செலுத்தி மூவரையும் சந்தாதாரராக சேர்த்துவிட்டார்.

ஒருமுறை அவர் நானாசாஹிப் சந்தோர்க்கர் வீட்டிற்குச் சென் றிருந்தார். அங்கு அவர் தாஸ்கணு மகராஜ் இயற்றிய பக்த லீலாம்ருதம் மற்றும் சந்த லீலாம்ருதம் ஆகிய நூல்கள் கவனிப்பாரற்று கிடப்பதைக் கண்டு, நானாவின் அனுமதியோடு அவற்றை எடுத்துச் சென்று அவற்றை ரூ.150 க்கு விற்று அத்தொகையை நானாவின் இரு மகன்கள் பெயரிலும் சந்தா தொகையாக சீரடி சாய்பாபா சமஸ்தானுக்கு அனுப்பி வைத்தார்.

பாபாவின் பேரருளுக்கும், பெருங்கருணைக்கும் அவர் பாத்திரமாகியிருந்தார். அவரது வீட்டிற்கு பாபா ஒரு புகைப்பட ரூபத்தில் எழுந்தருளியிருந்தார்.அந்த அற்புத லீலையை கவனியுங்கள்.

கேஷவ் கணேஷ் ஜோஷி என்பவர் அண்ணாவின் மருமகன் ஆவார். கேஷவ், ஞானசாகர் லித்தோ பிரஸ் நிறுவனத்தின் உரிமையாளர் மூலமாக பாபாவின் ஒரு படத்தை வரையச் செய்தார். அது எப்படி என்றால், காகா சாஹிப் மகாஜனியிடம் இருந்த பாபாவின் புகைப்படத்தை பெரிதும் விரும்பிய கேஷவ் அதே போன்ற ஒரு படத்தை தாமும் பெற ஆசைப்பட்டார்.



பி.வி.தேவ் வழிபட்ட பாபா படம்

அப்படி ஒரு அழகிய படம் வரையப்பட்டது. பிறகு அந்தப் படத்தை விலையுயர்ந்த மரச்சட்டத்தைக் கொண்டு கண்ணாடி பிரேம் செய்தார். படம் தயாரானதும் அதில் மிகவும் திருப்தியடைந்த அவர் பி.வி. தேவ் அவர்களோடு சேர்ந்து அப்படத்தை தன் இல்லத்திற்கு கொண்டு சென்றார்.

உரிய பூஜை சடங்குகளுக்குப் பிறகு அப்படமானது கேஷவ் வீட்டுச் சுவரில் மாட்டப்பட்டது. சில மாதங்களுக்குப் பின் தேவ் அவர்கள் தாணுவில் உள்ள அண்ணா சாஹிப்பின் வீட்டிற்குச் சென்றபோது, அதே படம் அங்கும்

மாட்டப்பட்டிருப்பதைக் கண்டு மிகவும் வியப்படைந்தார். ஆர்வம் உந்தித் தள்ள, கேஷவ் வீட்டில் இருந்த பாபாவின் படம் அண்ணா சாஹிப் வீட்டிற்கு எப்படி வந்தது என்று விசாரித்தார்.

அண்ணா கூறினார், கேஷவ் ஜோஷி இப்படத்தை தயார் செய்து தன் வீட்டில் மாட்டியதை தாங்கள் அறிவீர்கள்.அதன் ஓரிரு நாட்களுக்குப் பிறகு அவருக்கு ஒரு கனவு வந்துள்ளது. அதில் பாபா தோன்றி, என்னை தாணுவுக்கு கூட்டிச் செல். இப்படத்தை அண்ணாவிடம் கொடு என்று உத்தரவிட்டிருக்கிறார்.

உடனே கேஷவ், பாபாவின் விருப்பம் அது என்பதால் வேறு வழியின்றி அந்தப்படத்தை என்னிடம் கொண்டு வந்து கொடுத்துவிட்டார். அண்ணா தினந்தோறும் அவ்வுருவப் படத்திற்கு, காலையிலும், மாலையிலும் ஆரத்தி செய்ததோடு விஷ்ணு சகஸ்ரநாமம் படித்து, நைவேத்யம் வைத்து மிகுந்த பிரேமையோடு வழி பட்டு வந்தார் என்பதை சொல்லவும் வேண்டுமோ!

1910 ல் அண்ணா சாஹிப், காவாஜி, படீல், மூவரும் சீரடிக்குச் சென்றனர். அவர்கள் மூவரும் துவாரகாமாயிக்குச் சென்று சாயியை தரிசனம் செய்தனர். தேவ்வும், அண்ணாவும் பாபாவின்முன் வீழ்ந்து பணிந்து விட்டு அமர்ந்தனர். தேவ் பவ்யமாக பாபாவிற்கு ஒரு ரூபாய் தட்சிணை கொடுத்தார்.

பாபா உடனே மற்றொரு ரூபாய் கொடுக்கும்படி கேட்க, தேவ்வும் மகிழ்ச்சியுடன் மீண்டும் ஒரு ருபாய் கொடுத்தார். பிறகு பாபா தன் கையை நீட்டி மீண்டும் ஒரு ரூபாய் கேட்டார். தேவ் மீண்டும் ஒரு ரூபாய் கொடுத்தார். ஆக தேவ்விடம் இருந்து பாபா மூன்று ரூபாய் பெற்றுக் கொண்டார்.

பிறகு பாபா அண்ணாவிடம் திரும்பி இரண்டு ரூபாய் கேட்டு வாங்கிக்கொண்டார். ஆனால் காவாஜியிடம் இருந்து பாபா பணம் எதுவும் கேட்கவில்லை. மாறாக, அவரை உரத்த குரலில் திட்டியதோடு அவரை துவாரகாமயி படிக்கட்டுகளில் ஏறவே விடவில்லை.

அடுத்தடுத்த முறை அவர்கள் பாபாவின் தரிசனத்திற்கு வந்தபோது பாபா தேவ்விடம் மட்டுமே தட்சிணை பெற்றுக் கொண்டார். அண்ணாவிடம் கேட்கவில்லை. இதனால் அண்ணா மிகுந்த அதிருப்தி அடைந்தார். மிகவும் மனம் வருந்திய அண்ணா தேவிடம் இது குறித்து கேட்டார்.

பாபா ஏன் என்னிடம் தட் சணை கேட்க வில்லை. நான் அவருக்கு தட்சிணை கொடுக்க மிகுந்த விருப்பத்தோடு இருக்கிறேன். நாமிருவரும் ஒன்றாகவே வந்துள்ள போதும் பாபா உங்களிடம் மட்டும் கேட்கிறார். ஏன் என்னிடம் கேட்கவில்லை என்று வருத்தப்பட்டார்.

அதற்கு தேவ், பாபா உங்கள் மூலமாக வேறுவிதமான சேவைகளை பெற்றுக் கொள்வார். பாபாவிற்கு ஒருவர் செய்யக்கூடிய சேவை என்பது தட்சிணை மட்டுமல்ல, அது மட்டுமின்றி பாபா என்ன செய்கிறார்? ஏன் இவ்வாறு செய்கிறார் என்பதை யாரறிவார். அவர் சூட்சுமமானவர். புரியாத புதிர் போன்றவர். ஆனால் எது எப்படி இருப்பினும்,அவர் என்ன செய்தாலும் அது நமக்கு தீமை தராது, நன்மையே தரும்! என்று அண்ணாவிடம் கூறினார்.

ஓம் சாயி! ஸ்ரீ சாயி!
ஜெய ஜெய சாயி!

சாயி பக்தர்களுக்கு ஓர் நற்செய்தி..!



தவிட்டில் இருந்து தயாரிக்கப்பட்டு, ISO தரச்சான்றிதழ் பெற்ற...

RCM HEALTH GUARD RICE BRAN OIL உபயோகிக்கவும்.

தேசிய மற்றும் சர்வதேச விருதுகளைப் பெற்றது.



* ருசியாக உணவு சமைக்க,
* தலையில் முடி வளர,
* வயற்றுப் பிரச்சனை தீர,
* உடலில் தேய்த்துக்குளிக்க,
* திருவிளக்கு ஏற்ற,

இதில் அதிக அளவில் நோய் எதிர்ப்பு சக்தி நிறைந்துள்ளதால், சர்க்கரை, கொழுப்பு, வெரிகோஸ், கேன்சர், ரத்த கொதிப்பு, மற்றும் பல வியாதிகளை தடுக்க உதவும். மருத்துவ குணமுள்ள இந்த எண்ணையை ஒரு மாதம் உபயோகப்படுத்தி பார்த்தாலே மிக நல்ல வித்தியாசத்தை உணர முடியும்.

கலப்படம் உள்ள எண்ணெய், நெய்யை இறைவனுக்கு விளக்கு ஏற்ற பயன் படுத்துகிறோம். அதை தவிர்த்து கலப்படமில்லாத நமது எண்ணெய்யை உபயோகிப்பதன் மூலம் பகவான் சாயி நாதரின் ஆசியைப் பெற்று, உங்கள் வீட்டில் ஆரோக்யம் மற்றும் ஐஸ்வர்யம் வளரும்.



விவரங்களுக்கு:

ஜெயலட்சுமி : 9446367606
ரகுதேவி : 9894722332
காயத்ரி : 8754319357

உடல் எடை அதிகரிக்க காலிஃபிளவர்

பூக்கோசு என்று சொல்லப்படும் காலிஃபிளவரின் தாயகம் பசிபிக் பெருங்கடல் பகுதி அருகே உள்ள நாடுகள்தாம். அமெரிக்காவில் அரிசோனா, கலிபோர்னியா ஆகிய மாநிலங்களில் இது நன்கு விளைகிறது.

சீசன் சமயத்தில் தினமும் காலிஃபிளவர் சாப்பிடுவது உடலுக்கு சிறந்த சத்துணவாக அமையும்.100 கிராம் பூக்கோசில் கிடைக்கும் கலோரி அளவு 33தான். எனவே, 200 கிராம் பூக்கோசைத் தினமும் உணவில் சேர்ப்பது நல்லது.

குறிப்பாக, உடல் குண்டாக உடற்பயிற்சி, பலவகையான சத்துணவு வகைகள் சாப்பிட்டும் உடலில் சதை கூடாமல் இருப்பவர்கள் பூக்கோசைத் தினமும் உணவில் சேர்த்துக் கொண்டால், சீசன் முடிவதற் குள் ஒல்லியாக இருப்பவர்கள் ஓரளவு குண்டாகிவிடுவார்கள். காரணம், இதில் மாவுச்சத்தும் உயர்தரமான புரதமும் தாதுஉப்புகளும் அடங்கியிருக்கின்றன.

அதே நேரத்தில், படுகுண்டாய் இருப்பவர்கள் பூக்கோசை அளவுடன்தான் சாப்பிடவேண்டும். இல்லையெனில், அவர்கள் மேலும் குண்டாகிவிடுவார்கள்! வாத நோய்காரர்கள் பூக்கோசை உணவில் சேர்த்துக்கொள்ளக்கூடாது!

வளரும் குழந்தைகளுக்குத் தினமும் சூப்பாக சமைத்துக்கொடுத்தால் பூக்கோசில் உள்ள இரும்பு சத்து, திசுக்கள்,



நகம், முடி வளர உதவும். கந்தகச் சத்து, சுண்ணாம்புச் சத்து, பாஸ்பரஸ், புரதம், மாவுச்சத்து ஆகியவற்றால் குழந்தைகள் வாட்ட சாட்டமாய்த் திடகாத்திரமாய் வளர்வார்கள்.

குழந்தைகளைப் போலவே சத்துண வுடன் இரத்த விருத்தி, ஆரோக்கியமான உடற்கட்டு தேவை என்று விரும்பும் பெரியோர்களும் பூக்கோசைத் தவிர்க்கக் கூடாது. காலிஃபிளவரில் புழுக்கள் இருக்கும். எனவே, நன்கு கழுவின பிறகே சமைக்க வேண்டும்.

கைகால்களில் ஏற்படும் மூட்டுவலி குணமாகவும், உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகரிக்கவும் இதில் உள்ள வைட்டமின் 'சி' பயன்படுகிறது. 100 கிராம் பூக்கோசில் 55 மில்லிகிராம் அளவு வைட்டமின் 'சி' இருக்கிறது.

100 கிராம் பூக்கோசில் 1.2 சதவிகிதம் நார்ச்சத்து அமைந் துள்ளது. இது குடலில் தங்கியுள்ள கழிவுப் பொருள்களை வெளியேற்றி விடுகிறது. மலச்சிக்கல் ஏற்பட வாய்ப் பில்லை. இரத்த ஓட்டத்தில்

பித்தநீரும் கொழுப்பும் அதிக அளவு சேர்ந்துவிட்டால் நார்ச்சத்தே தடுத்து விடுகிறது. இதனால் எல்லாவிதமான இதயநோய்களும் முன்கூட்டியே தடுக்கப்பட்டுவிடுகிறது.

மாரடைப்பு, அதிக இரத்த அழுத்தம், நீரிழிவு முதலிய நோய்கள் ஏற்படாமல் நீண்டகாலம் நலமாய் வாழவேண்டும் என்பதற் காகத்தான் பட்டாணி, மொச்சை போன்றவற்றைப் பலரும் தொடர்ந்து சாப்பிடுகிறார்கள். அவற்றில் உள்ளதைப் போலவே பூக்கோசிலும் நார்ச்சத்து தக்கவிகிதத்தில் அமைந்துள்ளது.

பூக்கோசு சாப்பிட்டால் மூல நோய் குணமாகும். நாக்கு வறட்சி, தோல்வறட்சி ஆகியன நீங்கும். சளித் தொல்லையால் அவதிப் படுவர்களுக்கு இந்த உணவே சிறந்த அருமருந்தாகும்!

அடிக்கடி தலைவலியால் சிரமப்படு பவர்களுக்குப் பூக்கோசு குணமளிக்கும். வைட்டமின் 'ஏ'யும் சிறிதளவு இருப்பதால் கண் பார்வை தொடர்பாக ஏற்படும் தலைவலியும் உடன் குணமாகும். உடல் பளபளப்பிற்காகப் பழங்களைத் தொடர்ந்து சாப்பிடுகிற வர்கள் காலிஃபிளவரையும் தொடர்ந்து சாப்பிட்டு இதே நன்மையைப் பெறலாம்.

எல்லா வயதுக்காரர்களும் மிகவும் விரும்பிச் சாப்பிடும் பூக்கோஸில் அதற்கு ஏற்றவாறு பாஸ்பரஸ் சத்தும் போதுமான அளவில் அமைந்துள்ளது. இது மந்தப்புத்தியை அகற்றி மூளையைச் சுறுசுறுப்புடன் செயல்படத் தூண்டிக் கொண்டே இருக்கும்.

எனவே, காலிஃபிளவர் (சீசனின் போது) தினசரி நன்கு சாப்பிட்டு உடல் ஆரோக்கியத்தைப் புதுப்பித்துக் கொள்ள மறவாதீர்கள்.

வாழ்க வளமுடன்!
வாழ்க வையகம்!

தகுதி



நாம் ஒரு வட்டம் இட்டுவிட்டு, இதில் தான் பகவான் பாபா நிற்க வேண்டும் என்று விரும்பினால் அவர் நிற்பாரா? நமது சுயநல எண்ணங்களை எல்லாம் பிரார்த்தனை எனும் பெயரில் கொட்டிவிட்டு, கண்ணை திறந்த அடுத்த நொடி அது நிறைவேற வேண்டும் என்று அவசரப்படுத்தினால் அது நிறைவேறுமா?

நாம் எதை வேண்டினாலும் தருபவர் தான் பகவான் பாபா! ஆனால் அதற்கு முன் பாபா நம்மை அதற்கு தகுதிபடுத்திய பிறகே தருகிறார் என்பதை நாம் ஒருநாளும் மறந்துவிடக் கூடாது! அது போல் நாம் விரும்புகிற பொருள் அல்லது உறவு நமக்கு நிம்மதி தராது என்றால் அதை பாபா நமக்கு தருவதே இல்லை!

நாம் விரும்பாத பொருள் அல்லது உறவால் தான் நாம் பக்குவம் அடைவோம் என்றால் அதை நம்மிடம் இருந்து பாபா பிரிப்பதே இல்லை! ஒவ்வொருவருக்கும் பாபா நிகழ்த்துவது ஒவ்வொரு அணுகு முறை! காரணம், நாம் கடந்து வந்த முற்பிறவிகள் வித்தியாசமானது!

ஒரு பெரிய உண்மை என்னவெனில், நம்மை பாபா, பக்தராக தேர்ந்தெடுத்தது, நம் ஆசைகளை நிறைவேற்றி தருவதற்கு அல்ல! நம்மை பக்குவப்படுத்துவதற்கே!

தொடர் –32

சாய் சரவணன்

"அதி தேவதை"

சாயிநாதர் வாழ்ந்த சமகாலத்தில் தத்தமகராஜ், கஜானன் மகராஜ், ஸ்ரீ ஸகாராம் மகராஜ், தாஜுதீன் பாபா போன்ற சில மகான்களும் ஆங்காங்கே தன் அவதார காரியத்தை நிறை வேற்றியபடி வாழ்ந்தனர். இந்த மகான்களை நாடி வரும் ஒரு சில பக்தர்களை "நீங்கள் சீரடியில் வாழும் சாயி பாபாவிடம் செல்லுங்கள்" எனச் சொல்லி அனுப்பிவிடுவார்கள். நம் பாபாவும் தன்னிடம் வந்த அடிய வர்களின் தேவையை பூர்த்தி செய்து தன் மீது பக்தியையும், நம்பிக்கையையும் கொண்டு வாழும்படி செய்துவிடுவார்.

அவ்வகையில் தான் கோபர்கானில் வசித்தஸ்ரீஸகாராம் மகராஜ் எனும் மகானிடம் பாபு சாஹேப் ஜோக் அடிக்கடி தரிசனம் செய்ய வருவார். அப்படி ஒருநாள்ஸ்ரீசகாராம் மகராஜ் அவர்கள் பாபு சாஹேப் ஜோக்கை அருகில் அழைத்து "நீ சீரடிக்கு போ அங்கு தான் உனக்கு அனைத்தும் கிடைக்கும்" எனக் கூறினார்.

ஜோக்கும் அவரது மனைவியும் சீரடிக்கு சென்றனர். இருவரும் பாபாவை தரிசிக்க மசூதியில் கால் வைத்தவுடன் பாபா "என் சகோதரன் அனுப்பி வைத்தானா? வாருங்கள், வாருங்கள் என வரவேற்றார். பாபா சிறிது நேரம் பேசிய பிறகு ஆசி தந்து "இனி இந்த சீரடி தான் உங்கள் இருப்பிடம் வேறு எங்கும் செல்ல வேண்டாம்" என்றார்.



இப்படியாக பாபு சாஹேப் ஜோக் சீரடி வாசியானார். ஜோக் அவர்களுக்கு குழந்தை இல்லாத குறை இருப்பினும் அவரது மனைவியும் பாபாவின் சேவையிலேயே வாழ்வை கழிக்க முடிவு செய்தனர். ஒருமுறை ஜோக் பாபாவின் ஆரத்தி வழிபாட்டிற்கான பூஜா பொருட்களை பெறுவதற்காக இராதாகிருஷ்ணமாயிடம் வந்தார்.

(ஆயியிடமிருந்து தான் பாபாவின்

ஆரத்தி பூஜா பொருட்கள் செல்லும்) அப்போது ஜோக்கை கவனித்து ஆயி கூறினாள் "நீங்கள் பிறவி பயனை அடைய வேண்டுமாயின் நன்றாக குரு சேவை செய்யுங்கள், அப்படி செய்தால் நம் லட்சியத்தை அடையலாம் என் றாள்" ஜோக் அவர்கள் பல நாட்களாக ஆயியின் அயராத சேவையைக் கண்டு அதிசயப்பட்டார்.

மேலும் பாபா அனுப்பும் ஒரு ரொட்டியை மட்டும் உண்டு உயிருடன் ஜீவிப்பதையும் கேள்விப்பட்டு ஆயியியை எப்போது பார்த்தாலும் மரியாதை செலுத்தி வந்தார். ஒருமுறை ஜோக் அவர்கள் ஆயியை பார்த்து எப்படி உங்களால் பாபாவின் சேவை யில் அயராது உழைக்க முடிகிறது. எத்தனையோ சேவைகள் செய்தும் கூட சோம்பலுக்குரிய அடையாளமோ, சோர்விற்குரிய அறிகுறியோ தென் படவில்லையே! தங்கள் சேவை போற்றத்தக்கது என்றார்.

அதற்கு நம் ஆயி ஒரு பதிலை தந்தாள் "குருவின் சுய அடையாளத்தை எவன் அறிவானோ! அந்த குருவின் அருளால் தன் உண்மையான சுய அடையாளத்தை அவன் கண்டு கொள் வான். அப்படி கண்டு கொண்டவன் எப்போதும் ஆன்மீக விழிப்புணர்வோடு இருந்து தன் குருவிற்காக மட்டும் சேவை புரிவதற்காக ஜீவனை தரித்திருபான் என்றாள் ஆயி! ஆயியின் வாக்கை கேட்டு திரும்பி சென்றார் ஜோக்!

பிறகு தூங்குவதற்கும், குளிப்பதற்கும் மட்டும் தன் இருப்பிடம் செல்வார். மற்ற நேரமெல்லாம் பாபாவின் சேவை தனில் செலவிடுவார். ஜோக்கிற்கு சீரடியில் நிறைய சத்சங்க தோழர்கள் கிடைத்தனர். பாபாவும், ஜோக் அவர்களை சில ஆன்மீக நூல்களைப் படித்து பிறருக்கு கூறுவதை போன்ற சத்சங்க வகுப்புகளை எடுக்கக் கூறுவார். இப்படியாக பாபா சீரடிக்கு மேலும் பல அடியவர்களை இழுத்து அவர்களையும் ஆன்மீக பாதைக்கு இட்டுச் செல்வார்!

ஜோக்கின் சேவைகள் சிலவற்றை நாம் பிற அத்தியாயங்களில் காணலாம். இப்பொழுது நம் இராதாகிருஷ்ண மாயி ஓர் அவதாரமாக கருதுபவரும் "பாபாவின் பக்திக்கே இவள் ஆச்சார்யாள் எனும் பட்டத்தை தந்தவரும் ஆன ஹரிசீதாராம் தீட்சித் அவர்களின் வருகை பற்றி சிறிது காண்போம்! நாம் ஏற்கனவே ஒன்றை கூறி இருந்தோம் பாபா கபர்டே என்பவரிடம் "நான் (பாபா), நீ (கபர்டே), பாபு சாஹேப் ஜோக், காகா சாஹேப் தீட்சித், சியாமா, தாத்யா சாஹேப் நூல்கர் என நாம் எல்லோரும் ஒரு குருவுடன் சேர்ந்து வாழ்ந்து வந்தோம்" எனக் கூறி இருந்தார்.

அதன் அடிப்படையிலும், ருணானுபந்தத்தின் மூலமாகவும் பலரை பாபா சீரடிக்கு இழுத்தார். இவர்களை பாபா சீரடிக்கு இழுப்பதில் இராதாகிருஷ்ணமாயிக்கு பெரும்பங்கு இருந்தது. ஏனெனில் அவர்களால் சீரடியின் வளர்ச்சி செழித்தோங்க போகிறது எனவும், அவர்கள் சிறந்த கருவியாக போகிறார்கள் என்பதையும் நம் ஆயி பாபாவின் அருளால் அறிந்தே வைத்திருந்தாள்!

ஹரி சீதாராம் தீட்சித் சிறந்த சட்ட ஆலோசகர், எல்லோராலும் புகழ்பெற்ற மனிதர், பம்பாய் பல் கலைக்கழக உறுப்பினரும் கூட, சிறந்த பேச்சாளர் எனச் சொல்லி கொண்டே போகலாம். ஆன்மீக ரீதியில் பார்த்தால் பல புண்ணிய



சேத்திரங்கள் சென்று வந்தவர், புண்ணிய நதிகளில் நீராடியவர், பல மகான்களின் தொடர்பையும் பெற்றவர். இப்படி பட்டவரை அவரது விதி சீரடிக்கு இழுத்து வர ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்தியது.

அந்த சாயி தர்சன பாக்கியம் கிடைக்க அவரது வாழ்வில் ஏற்பட்ட பெரிய துரதிஷ்டமே கருவியாக அமைந்தது. புகழ்பெற்ற ஹரி சீதாராம் தீட்சித் இங்கிலாந்து நாட்டிற்கு சென்ற போது ஓர் விபத்தில் காலில் காயம் ஏற்பட்டது.

இறுதியில் அவரது கால் ஊனமானது. இந்த கால் ஊனத்தின் விளைவே தீட்சித் அவர்களை ஆன்மீக வாழ்வு வாழ உதவியாக இருந்தது.

தீட்சித் அவர்களின் சீரடி வருகை பற்றி கதைகளை நாம் சாய்சத்சரிதையில் அனுபவித்து இருப்போம். தீட்சித் அவர்களை தன்னிடம் இழுக்கவும், தன்னிடம் அழைத்து வர ஓர் திட்டம் தீட்டி திரு. சியாமா அவர்களை பாபா அகமது நகருக்கு அனுப்பிய லீலையை நன்கு அறிவோம்! தீட்சித் அவர்களின் கோரிக்கை யாதெனில், "பாபாவை நான் தரிசிப்பேன், பாபாவை பிரார்த்தனை செய்து கால் ஊனத்தை சரி செய்யாவிடினும், ஊனமாக சதா ஓடித்திரியும் மனதை குணப்படுத்தி தமக்கு எல்லையற்ற பேரின்பத்தை தரும்படி வேண்டுவேன்" என்றார்.

இக்கோரிக்கையுடன் பாபாவின் லீலையால் தீட்சித் முதன்முதலாக 1909 நவம்பர் மாதம் 30ம் நாள் சீரடிக்கு வந்தார். பாபாவைக் காண தீட்சித் செல்கையில் இராதாகிருஷ்ணமாயி தீட்சித் அவர்களை உற்று நோக்கி பின்பு வீதிகளை சுத்தம் செய்தபடி இருந்தாள். பிறகு பாபாவின் தரிசனம் பெற்று தீட்சித் ஆனந்தத்தில் மூழ்கி போய்விட்டார். அவரை பக்தியின் அஷ்டபாவங்களும் சூழ்ந்து கொண்டன.

தீட்சித் பாபாவின் திருவடியில் சரணடைந்து விட்டார் அவர்! பிறகு பாபாவின் அனுமதிக்கிட்டி சீரடியிலிருந்து புறப்பட தயாரானார் பாபாவை பிரிய முடியாமல் குதிரை வண்டியில் பயணமானார். அதே சமயம் நம் ஆயி தீட்சித் அவர்களிடம் "நீங்கள் பிறந்ததன் பயனை அடைய சீரடிக்கு வருகை தந்து சாயியின் குரல் சேவையில் முழுமையாக ஈடுபடுங்கள். இதுவே இனி தாம் செய்ய வேண்டிய கடமை" என்றாள். தீட்சித் அவர்களும் சாயியின் தரிசன பாக்கியத்தைப் பெற்று பாபாவை நினைத்தவாறே சீரடியை விட்டுச் சென்றார்.

தீட்சித்தின் மீது பாபா தன் கருணையை பொழியத் தொடங்கினார். அதன் விளைவாக அவர் சீரடிக்கு மீண்டும் வரும்படி நேர்ந்தது. 1909 டிசம்பர் மாதம் 2ம் நாள் மீண்டும் சீரடிக்கு வந்தார். பாபாவை தரிசனம் செய்தார். அப்போது சாயி எல்லோர்

முன்னிலையிலும் "காகா சாஹேப் தீட்சித்" என்ற நாமகரணம் சூட்டினார்.

பாபாவின் திருவடியில் தன் சிரசை வைத்து நமஸ்கரித்தார். தீட்சித் மதிப்புமிக்க புண்ணிய ஆத்மா என்பதால் பாபா அவரை வாடாவில் தங்கும்படி அனுப்பி வைத்தார். அங்கே பலர் தீட்சித் அவர்களுக்கு நண்பர்கள் ஆயினர். ஒரு சமயம் தீட்சித், இராதாகிருஷ்ணமாயி பாபா நடந்து செல்லும் பாதையை கூட்டும் காட்சியை கண்டார்.

ஆயியை பற்றி சில விஷயங்களை நன்கு அறிந்து வைத்திருந்தார். ஆயியின் குருசேவையைக் கண்டு வியந்து போவார் தீட்சித் அவர்கள். பிறகு கால சூழ்நிலையின் காரணமாக பாபாவிடம் அனுமதி பெற்று சீரடி விட்டுச் செல்வார் எனினும் அடிக்கடி பாபாவின் அருகாமை வேண்டி சீரடிக்கு ஓடி வருவார். இப்படியாக பல மாதம் கழிந்தன. பிறகு பாபாவின் அடியார்களின் ஒருவராக சீரடியிலேயே நிரந்தரமாக தங்கவும் செய்து விட்டார். சில சமயம் இராதாகிருஷ்ணமாயியோடு உரையாடும் பாக்யமும், ஆயியோடு இணைந்து குரு சேவையை செய்யும் காலமும் சாயிநாதரின் அருளால் கூடிவந்தது.

– தொடரும்...

கடவுளின் மொழி



ஆதி சைவர்கள் தமிழையையும், இந்துக்கள், சமஸ்கிருத மொழியையும், முகமதியர்கள் அரபி மொழியையும், யூதர்கள் ஹீப்ரு மொழியையும் கடவுளின் மொழி என்று நம்பி வந்தாலும், கூறி வந்தாலும், அவருக்கு எந்த மொழியுமே புரியாது என்பதுதான் சத்தியம்.

பின் அவர் எந்த மொழியைத் தான் புரிந்து கொள்வார் என் கிறீர்களா? மௌன மொழியைத்தவிர வேறொன்றையும் அவர் புரிந்து கொள்ள மாட்டார். ஏனெனில் மௌனத்தில் மட்டுமே உண்மையான பிரார்த்தனை இருக்கிறது.

எனவே நீங்கள் வார்த்தைகளின் மூலமாக பிரார்த்தனை செய்தால் நீங்கள் அவரை ஒருபோதும் சென்றடைய மாட்டீர்கள். உங்கள் பிரார்த்தனையானது ஒருபோதும் அவரைச் சென்றடையாது.

வார்த்தைகள் மிகவும் கனமானவை. உங்களது பிரார்த்தனையானது உயரத்திற்கு எழுந்து இறுதியான ஒன்றினை அடைவதற்கு அவை உங்களை அனுமதிக்காது. நீங்கள் கடவுளை அடைய விரும்பினால், மௌனத்தின் பாதையை கற்றுக்கொள்ளுங்கள். மௌனமே சிறகுகளை உடையது.

தொடர் –9

சுந்தர்சாய்

திருவருள் தேடி

ஓம் சாய்ராம்.

நமது சாய் அன்பர்கள் அனைவருக்கும் எமது அன்பான வணக்கத்தை தெரிவித்துக் கொண்டு, நமது "திருவருள் தேடி" தொடரில் சென்ற இதழில் எம்முடன் குறுகிய காலம் மொழி பெயர்ப்பாளராக பணி புரிந்த திரு.கேனன் ஹமிதோவ் என்ற இஸ்லாமிய இளைஞரின் வாழ்வில் சாய் பகவான் அருளிய மாற்றத்தை தெரிந்து கொண்டோமல்லவா!

அதுவும் ஒரு நம்பிக்கை இழந்த இளைஞனுக்கு நமது பகவான் சமயமறிந்து, தேவையறிந்து, அளித்தது வெறும் சம்பளம் ஈட்டும் வேலையை மட்டுமன்று. அது சாய் பகவான் அவருக்கு அளித்த புது வாழ்வு என்று கூறினேன் அல்லவா? அதைத் தொடர்வோம்.

அது என்ன வென்றால், எம்மோடு இருந்த 3, 4 மாதங்களில் அவர் கற்று, பார்த்து,உணர்ந்த அனுபவத்தால் அவருக்கும் நம்மைப் போன்று வெளிநாட்டு வர்த்தக தொடர்பில் ஒரு மேலாளராகத் தொடங்கி சைனா, வியட்நாம், மற்றும் எகிப்து, இந்தியா என பல நாடுகளுக்குச் சென்று வர்த்தகத் தொடர்பை ஏற்பபடுத்தி யதோடு பின்னாளில், அவர்கள் துருக்கியில் ஒரு தொழிற்சாலையை தொடங்கிய போது, அதில் இண்டல் நேசனல் டைரக்டராக பதவி உயர்வும் கிடைக்கப்பெற்றார்.



அதுமட்டுமன்று மனம்போல் மாங்கல்யம் என்பதற்கிணங்க காதலியே மனைவியாக அமைந்து, ஒரு அழகான பெண் குழந்தையை பெற்றெடுத்து, தொழிலில் உயர் பதவி, திருமண வாழ்வில் ஆனந்தம், என்னும் இரட்டைப் பரிசைப் பெற்று வாழ்வில் ஆனந்தமான முன்னேற்றத்தை அனுபவித்தார் அந்த இளைஞர்.

இந்த மிகப்பெரிய ஆசீர்வாதம் எமக்கும் மிகப்பெரிய மனநிம்மதியைக் கொடுத்தது. நமக்கு தெரிந்த ஒருவரது வாழ்க்கை இறுக்கமாக அமையும் பொழுது என்னால் ஒன்றும் செய்ய முடியவில்லையே என்ற ஏக்கம் அவருக்கு ஏற்பட்ட வாழ்க்கை மாற்றம் சந்தோசமான மன

நிம்மதியை கொடுத்தது. அது மட்டுமின்றி சாய் பகவானது மேன்மையை யாம் முழுமையாக உணரும்படியும் நிகழ்ந்தது. சாய் பகவானுக்கு எத்தனை முறை நன்றி கூறினாலும் அது குறைவே!

நம் வேலையில் இறையருளால் புதிய பொருப்பும் கிடைத்து அதில் நல்ல முன்னேற்றமும் காண முடிந்தது. நம்முடன் வேலை செய்த வெளிநாட்டு நண்பர்களுடன் உறுதியான நட்புப் பாலம் உறுதியானது. நம் வியாபார உத்திகளுக்கு நமது அலுவலகத்திலும், வாடிக்கையாளர்களிடமும் கூட ஒரு நல்ல அங்கீகாரம் கிடைத்தது.



எமது தனி மதிப்பும், அந்தஸ்தும் உயர்ந்தது எனும்போது அதில் தன்னம்பிக்கை ஒளிரத் தொடங்கியது. அஜர்பைஜான் நாட்டில் எமது தொடர்பு உறுதிப்படுத்தப் பட்டவுடன் எமக்கு அடுத்து ஒரு நாட்டிலும் களப்பணி செய்து, அங்கும் நம் வியாபாரத்தை பெருக்க முயன்றால் என்ன என்று முழு ஆர்வம் ஏற்பட்டது.

இந்தத்தொடரில் சில நேரங்களில் சுயசரிதை போன்ற தோற்றம் வருவதை என்னால் தவிர்க்க இயலவில்லை என்பதை மனம் ஒப்பி நான் அனைவரிடமும், சிரம் தாழ்த்தி மன்னிக்க வேண்டுகின்றேன். உள்ளதை உள்ளபடி எழுத முயற்சிக்கும் போது நம் மனதில் உள்ள குதூகலத்தை மறைக்க முடியாது அல்லவா? நானும் சராசரி மனிதன் தானே நண்பர்களே!

எனது அடுத்த முயற்சியாக இரண்டு அண்டை நாடுகளைத் தேர்வு செய்து அங்கு நம் மருந்துகளை விற்பனை செய்ய எப்படி முயற்சிக்க வேண்டும் யாரை தொடர்பு கொள்ள வேண்டும். என ஆலோசனையில் இறங்கினேன்.

நான் ஆரம்பம் முதலே ஒரு விசயத்தை தெளிவாக உணர்ந்ததால், செய்வது நானாக இருந்தாலும் செய்விப்பது நம் சாயி பகவானின் சக்தியே! என்பதில் உறுதியாக இருந்தேன். ஒரு உற்சாகத்துடன் எல்லா விதமான சவால்களையும் எளிதாக சந்திக்க முடிந்தது. நான் மற்றக் கம்பெனிகளில் வேலை செய்யும் இந்தியர்களைப் பற்றி அறிந்துகொள்ள இந்திய தூதரகத்தை அணுக வேண்டி அதிகாரிகளை தொலைபேசியில் தொடர்பு கொண்டேன்.

அவர்களும் என்னை வந்து சந்திக்கும் படி கூறினார்கள். அங்கும் நமக்கு சாய் பகவானின் முன்னேற்பாடுகள் பலமாக அமைந்தது. நான்

சென்று அவர்களை சந்தித்தபோது அதிகாரிகளில் ஒரு தமிழ்குரல். நான் ரவி என்று அறிமுகம் செய்து கொண்டவுடன் ஒரு பேராதரவு கிட்டியதாக உணர்ந்தேன். ஏனென்றால் எமக்கு நம் நாட்டு மொழியான ஹிந்தி அவ்வளவு சுலபமாக பேச வராது.

ஆனால் வெளிநாட்டில் இந்தியர்கள் ஹிந்தியில் பேசவே விரும்புவார்கள் என்பது என் தனிப்பட்ட அனுபவம். நான் ரவிச்சந்திரன் என்ற ரவி மூலமாக பல நண்பர்களை அறிமுகம் செய்து கொண்டதுடன் ஞாயிற்றுக் கிழமைகளில் அனைவரும் ஒன்று கூடும் விருந்துகளில் கலந்து கொள்ளும் வாய்ப்பும் கிட்டியது

அங்கு அனைவரும் பல செய்திகளைப் பகிர்ந்து கொள்வதுடன் எந்த நேரத்தில் எந்த உதவி வேண்டுமானாலும் தொடர்பு கொள்ளுங்கள் என அவரவர் மொபைல் எண்களையும் பகிர்ந்து கொண்டனர். வெளிநாட்டில் வேலை செய்பவர்கள் அவசியம் அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகத்தில் பதிவு செய்து கொள்வது எவ்வளவு அவசியம் என்பதை எனக்கு உணர்த்திய ஒரு நல்ல சந்தர்ப்பம் அது.

எந்த நேரத்திலும் எது வேண்டுமானாலும் நடக்கலாம். ஒரு திருட்டு, தாக்குதல், விபத்து, உடல் நலக்கோளாறு என எந்த சூழ் நிலையிலும் நமக்கு உதவ நமக்கென்று ஒரு நம்பிக்கையான நட்பு தேவை. அதை நமக்கு நம் சாய் அமைத்துக் கொடுத்த ஒரு பாதுகாப்பு அல்லவா? அந்த நினைவுகள் இன்றும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

நமது நட்பு வட்டாரத்தில் நமது



அடுத்த பயணமாக ஜார்ஜியா என்ற அண்டை நாட்டைப் பற்றிய தகவல்களை சேகரிக்க ஆரம்பித்ததில் ஒரு எச்சரிக்கை கலந்த தகவல்களே எமக்கு கிடைத்தது. மேலும் அங்கு செல்வதற்கு முதற் கட்டமாக விசா பெற வேண்டிய அவசியம் இருந்தது. அந்த முயற்சியில் இருந்த பல தடைகள் எம்மை சிறிது தளர்வடையச் செய்தது.

எந்த ஒரு அறிமுகமும் இல்லாத ஒரு நாட்டுக்குச் சென்று களப்பணி மேற்கொள்வதில் உள்ள பிரச்சனைகள் ஒவ்வொன்றாக தலை எடுத்தது. யாம் தீவிரமாக இதைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்க, நம்மை சுற்ற வைத்து வேடிக்கை பார்த்த ஒருவர் நம்மீது இரக்கம் கொண்டு உதவிக்கரம் நீட்ட முடிவு செய்து மற்றொரு நண்பரை அறிமும் செய்த அபார கருணை மழையில் அடுத்த இதழில் நனைய தயாராவோம்.

குரு வாழ்க! குருவருள் வளர்க! எல்லாம் சாயி மீண்டும் தொடர்வோம்.

– தொடரும்...

எலைட் எண்டர்பிரைசஸ்

தொப்பம்பட்டி பிரிவு, HDFC பேங்க் அருகில், MTP ரோடு,
கோயம்புத்தூர் - 641 017. செல்: 98434 40806

Authorized Distributor: GS Caltex

Authorized Dealer: Castrol | SERVO | MAK LUBRICANTS | Shell Lubricants | MOTUL | AMARON | SF SONIC

GST No: 33BMOPS1392A1Z3

ELITE ENTERPRISES









GS Caltex
Castrol

P.Sivasaravanan B.E.,
98434 40806

Products

- Automobile Engine Oils
- Hydraulic Oils
- Gear Oils
- Compressor Oils
- Cutting Oils
- Greases-Industrial
- Greases-Automobile
- Brake Oil
- Coolant Oil

ELITE ENTERPRISES

All Two Wheeler & 4 Wheeler Batteries Available Here

SF SONIC
AMARON



HOME UPS AVAILABLE

ஆட்டோ மொபைல் ஆயில், இண்டஸ்ட்ரியல் ஆயில், க்ரீஸ், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன பேட்டரிகள், வீட்டு உபயோக UPS, பேப்பரிகள் கிடைக்கும்.

சித்தர்களின் ஜீவ சமாதி தரிசனம்



- அயனாவரம்
வெங்கடேசன்
9941782523

சித்தர்களின் சீவ சமாதி தரிசனத்தில் இம்மாதம் நாம் ஸ்ரீலஸ்ரீ கோபால சுவாமிகள் சீவ பீடத்தை தரிசனம் செய்து அவரது வரலாற்றினை அறிந்து கொள்வோம் வாருங்கள்.

சாது ஸ்ரீலஸ்ரீ கோபாலசுவாமிகள்



ஸ்ரீலஸ்ரீ கோபால சுவாமிகள் சித்தரின் பூர்வீகத்தை அறிய முடியவில்லை. சுவாமிகள் தனது இளம் வயதில் வெளிநாடுகளில் வாழ்ந்தார் என்றும், பின்பு தாய்நாடு திரும்பி நாடு முழுவதும் உள்ள புனித தலங்களுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு, பல குருமார்களை சந்தித்து அவர்களிடம் இருந்து, யோகம், தவம், சித்த மருத்துவம் என்று பல வித்தைகளைக் கற்றுக் கொண்டார் என்றும் செவிவழிச் செய்தியாய் அறிய முடிகின்றது.

பின்னர், சென்னை செங்குன்றம் பகுதியில் உள்ள தண்டல் கழனி என்ற கிராமத்திற்கு வந்தார். அவர் அங்கு வருவதற்கு முன்பாகவே கிராமம் முழுவதும் மர்ம நோய் பரவியிருந்திருக் கின்றது. நோய்க்கு பயந்து மக்கள் ஊரை விட்டு வெளியேறியிருக்கின்றார்கள்.

இதைக்கண்ட சுவாமிகள்,சித்த மருந்துகளை தயார் செய்து மக்களுக்கு கொடுத்திருக்கிறார். மருந்து வேலை செய்யவே கிராம மக்கள் மர்ம நோயில் இருந்து விடுபட்டனர். இதனால் சுவாமிகளை அவ்வூர் மக்கள் தெய்வமாக வணங்கி, எங்களை விட்டு எங்கும்

செல்லக் கூடாது. எங்களுடனே தங்கியிருக்க வேண்டும் என்று மனமுருக வேண்டியதால், சுவாமிகளும் மக்களின் அன்பிற்கு இணங்கி தண்டல் கழனி கிராமத்திலேயே தங்கிவிட்டார்கள்.

அதன்பின்பு ஸ்ரீலஸ்ரீ கோபால சுவாமிகளை மக்கள் மருத்துவச் சித்தர் என்றே அழைத்தனர். பிற்பாடு கிராம மக்களின் ஒத்துழைப்போடு சுவாமிகள் அந்த கிராமத்திலேயே ஒரு மடத்தை நிறுவினார்.

இம் மடத்திற்கு பல குருமார்கள் வந்து சென்றுள்ளனர். குறிப்பாக, காவாங்கரை மகான் ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள் அடிக்கடி இங்கு வந்து தங்கிச் சென்றிருக்கின்றார்.

சுவாமிகள் தான் கற்ற வித்தைகளைப் பயன்படுத்தி, மருத்துவம், யோகம், தவம் போன்ற கலைகளின் மூலம் மக்களின் பிணிகள், குறைகளை நீக்கி அனைவருக்கும் பிடித்த மெய் ஞானியாக வாழ்ந்து வந்திருக்கிறார்.

கிராம மக்களின் பெரும் துணையுடன் 1944 ஆம் ஆண்டு தண்டல் கழனி கிராமத்திலேயே சித்த வைத்தியசாலை ஒன்றை கட்டி தனது கடைசிகாலம் வரை மக்களுக்குப் பணியாற்றி அங்கேயே சமாதி ஆகியிருக்கிறார்.

சென்னை புகழ் அருகில் உள்ள காவாங்கரையில் சமாதி கொண்டுள்ள ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள் வாழ்ந்த காலத்தில் ஸ்ரீ கோபாலசுவாமிகளும் வாழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சில நேரங்களில் கண்ணப்பசுவாமிகள் இரவு நேரங்களில் வீதி வீதியாக சுற்றிவருவார். அப்படி சுற்றிவரும் போது அடிக்கடி கோபாலசுவாமிகளின் சித்த வைத்தியசாலைக்குச் சென்று தங்கியிருப்பாராம்.



ஒருமுறை, கொள்ளைக்கூட்டம் ஒன்று சுவாமிகளை கொலைசெய்யும் நோக்கத்தோடு, சித்த வைத்திய சாலையின் மீது தாக்குதல் நடத்தியபோது, அதை அறிந்து கொண்ட ஸ்ரீ கண்ணப்ப சுவாமிகள் கையில் தீச்சட்டியுடன் வந்து அவர்களை எதிர்கொண்டு விரட்டி அடித்து சுவாமிகளை காப்பாற்றியதாகக் கூறுகின்றனர்.

இச்சம்பவத்திற்குப்பின்பு சுவாமிகள் கண்ணப்ப சுவாமிகளிடம் மிகுந்த

அன்பு கொண்டு நெருங்கி பழகி வந்திருக்கிறார். இதன் காரணமாக பின்னாளில் சுவாமிகள் இருவருமே இரவு நேரத்தில் வீதி வீதியாக நடந்து வருவதை வழக்கமாக்கிக் கொண்டிருக்கின்றனர்.

சுவாமிகள் இருவரும் சமாதியாகி பல ஆண்டுகள் ஆகியும் இன்றும் இரவு நேரங்களில் சுவாமிகள் இருவரும் வீதி உலா வருவதாக தண்டல் கழனி கிராம மக்கள் கூறுகின்றனர்.

இன்று கோபாலசுவாமிகள் மடத்தில் கண்ணப்பசுவாமிகளின் பல அபூர்வ புகைப்படங்கள் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன. சுவாமிகள் மருத்துவம் பார்க்க உபயோகப்படுத்திய பொருட்களும் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது.



தன் வாழ்நாள் முழுவதையும் மக்களுக்கு சேவை செய்வதிலும், ஆன்மீக காரியங்களிலும் செலவிட்ட நமது சுவாமிகள், 1973 ம் ஆண்டு மகாளய அமாவாசை தினத்தில் சீவசமாதி ஆனார். கண்ணப்ப சுவாமி களும் மகாளய அமாவாசையில் தான் சீவசமாதி அடைந்தார். இருவருக்குள் உள்ள ஒற்றுமை நம்மை வியக்க வைக்கிறது.

சுவாமிகளின் மடம் மிகவும் அமைதியாக உள்ளது. சுவாமிகளின் சமாதி, மடத்தின் வளாகத்தில் எளிமையாக அமைக்கப்பட்டுள்ளது. தியானத்தின் மூலம் நாம் சுவாமிகளை வணங்கி, நம் கர்ம வினைகளை குறைத்துக்கொள்வோம்.

"சித்தர்களின் சீவசமாதியைத் தொழுவோம்! கர்மவினை அகன்று கவலையின்றி வாழ்வோம்"!

<u>பேரூந்து வழித்தடம்:</u>

சென்னையில் இருந்து அனைத்துப் பகுதிகளிலும் இருந்தும் செங்குன்றத் திற்கு பேரூந்து வசதி உள்ளது.

<u>மடத்தின் முகவரி:</u>

சாது ஸ்ரீலஸ்ரீ கோபாலசுவாமிகள் மடம், தண்டல்கழனி, சாமியார் மடம், செங்குன்றம், திருவள்ளூர் மாவட்டம்.

<u>குறிப்பு:</u> சென்னையில் இருந்து வருபவர்கள், செங்குன்றம் பேரூந்து நிலை யத்தின் வலதுபுறத்தில் சிக்னல் அருகே உள்ள நெல் மொத்த வியாபாரிகள் சங்க திருமண மண்டபத்திற்கு அடுத்து உள்ள தெருவில் கடைசியில் சாமியார் மடம் அமைந்துள்ளது.

மன வலி, மற்றும் உடல் வலி, இந்த இரண்டாலும் நமது தீய கர்மா பெரும்பாலும் கரைந்துவிடும். ஆனால் யாருக்காவது நாம் தருகிற மன வலி நம்மையே திரும்பி வந்து தாக்கும்.



எதற்கு அடி வாங்குகிறோம் என்று தெரியாமல் வாங்குவதை விட, தெரிந்து அடி வாங்குவதில் அதிர்ச்சி இருக்காது! மனம் பக்குவம் அடைந்துவிட்டால் நமக்கு வருகிற எல்லா துன்பங்களையும் ஒரு சாட்சியாக மட்டுமே எதிர் கொள்கிறோம்!

காய் பழமாகிவிட்டால் அது கிளையில் தங்குவதில்லை! திரையில் படம் தங்காதது போல் பக்குவமடைந்த மனதில் எந்த சம்பவங்களும் தங்குவதில்லை! அதற்கு "சாயி ஞானம்" தேவை!

ஆன்ம தைரியம்

சில நேரங்களில் நமது தலையீடே இல்லாமல் பணம் விரயமாகும்! யாரிடமாவது பணத்தை ஏமாறுவோம்! எல்லாம் தீய கர்ம நிவர்த்திக்கான செயல்முறையே! எதை விதைக்கிறோமோ அதையே அறுவடை செய்கிறோம்!

ஆனால் அந்த நிலத்துக்கு உரிமையாளர் பாபாவே! நாம் அல்ல! இதை உணர்ந்து கொண்டு பகவான் பாபாவிடம் நாம் செலுத்தும் உண்மையான பக்தியே வலிமையை தரும்! நமது வலிமைக்கு முன் "வலி" என்பது நமது கால் தூசி மட்டுமே! ஏனெனில் பாபா பக்தர்கள் ஆன்ம தைரியம் மிகுந்தவர்கள்!

எல்லாம் சாயி! எல்லாமே சாயி!!

"கூட்டுப்பிரார்த்தனை"

உங்களுக்காக! வழி நடத்துபவர் "பிரார்த்தனை செம்மல், பிரார்த்தனை சீலர், பிரார்த்தனை சிகரம்" த. சாய் கலியன் M.com.,BL., MBA., M.sc(yoga).,CAIIB., Spiritual Healing Master. வழக்கறிஞர் மற்றும் யோகா ஆசிரியர்.

கல்வி, தொழில்,நோய்,வறுமை, கடன்,திருமணத்தடை, குழந்தையின்மை, குடும்ப பிரச்சினை எதுவாக இருந்தாலும் அவற்றிற்கெல்லாம் பொது நலன் கருதி, சேவை மட்டுமே கருத்தில் கொண்டு நமது கண்கண்ட கலியுக தெய்வம் சற்குரு சாயிநாதனிடம் பிரார்த்தனை செய்யப்படும்.

தொடர்புக்கு : த. சாய் கலியன் 34/22A, சிபி தெரு, பிரின்ஸ் சர்க்கிள், மகேந்திரபுரி, சேலம். 636008. தொலைபேசி:9962193311, 9092242598.

அன்னதான சேவை

அன்பிற்கினிய சாயி சொந்தங்களே...

நமது சாயி மகராஜ் குருவை தேடி பத்திரிகையின் சார்பாக, பிரதிவாரம் வியாழன் தோறும், நடமாட முடியாமல் இருக்கும் முதியோர்கள், உடல் ஊன முற்றோர்கள், மனநலம் குன்றியோர்களின் இருக்கும் இடம் தேடி சென்று அன்ன தான சேவை நடந்து வருகிறது. அன்னதான சேவையில் பங்குபெற காணிக்கை அனுப்ப விரும்பினால் கீழ்கண்ட வங்கி கணக்கிற்கு அனுப்பி உதவலாம்.

ஆன்லைனில் அனுப்ப:

S.Jayanthy, INDIAN BANK
AC.No: 602264370 , IFS Code No: IDIB000P056
(Purasaiwakkam Branch) Chennai
Gpay: 6385129372

இம்மாத அன்னதான நன்கொடையாளர்கள்

திரு. ஆகாஷ் குடும்பத்தார். அயனாவரம். ரூ.3001
திரு.முனுசாமி பச்சையம்மாள் சென்னை. 87.ரூ.3000.
திரு.பாலகிருஷ்ணன்.அண்ணாநகர் ரூ.3000.
திருமதி.ஹேமாவதி நமசிவாயம். சாலிகிராமம்.ரூ.2000.
திரு.வருண்குமார்.கொளத்தூர். ரூ.1000.
செல்வி. டி.சரண்யா.வில்லிவாக்கம். ரூ.1000.
திருமதி.சுப்புலட்சுமி மலையப்பன். சென்னை.ரூ.1000.
திரு.கேஸ்வர். ஈரோடு.ரூ.700. / திரு.ஆரணி. ரவி. ஆரணி. ரூ.700.
திருமதி.ஜெயசாந்தி நாகமூர்த்தி. AYK, ரூ.600.
செல்வி.சாய் அர்ச்சனா, சென்னை 501.
திரு. நீலவண்ண நாராயணன். திருப்பனந்தாள். ரூ.501.
திரு. முரளி சாய்ராம். திருநின்றவூர். ரூ.500.
செல்வி. சௌம்யா. மயிலாப்பூர்.ரூ.500.
திரு.சந்திரன். கொளத்தூர். ரூ.500

திரு.லதா குடும்பத்தார். சென்னை. ரூ. 500.
செல்வி.வீ.லெட்சுமி.அயனாவரம். ரூ.500
திருமதி. நித்யா ராஜேந்திரன் கூடுவாஞ்சேரி. ரூ.500.
திருமதி.மகாலட்சுமி பொன்முருகன். மதுரை. ரூ.500.
திருமதி.வாழ்க வளமுடன் சுமதி. கொளத்தூர். ரூ.500.
திரு. வெள்ளைச்சாமி. AYK.ரூ.500.
திருமதி.இந்துமதி. அயனாவரம். ரூ.500.
திருமதி.உமா மகேஸ்வரி.அயனாவரம். ரூ.500.
திருமதி.நித்ராலட்சுமி.கோவை. ரூ.500.
திரு. அபிராம்,ஸ்வேதா ஸ்வாதி, திருமங்கலம்,ரூ.500.
செல்வி.மோனிஷா.அயனாவரம்.ரூ.500
திருமதி. ஜானகி கண்ணன். அயனாவரம். ரூ.470.
திருமதி.பாக்கியவதி.ராணிப்பேட்டை. ரூ.400.
திருமதி.வரலட்சுமி பிரபாகரன். அயனாவரம்.ரூ.400.
திரு. இராதாகிருஷ்ணன். துறைமுகம். ரூ.400.
திருமதி.லதாபாபு. வேப்பம்பட்டு. ரூ.300.
திருமதி. உமா விஜய்ஆனந்தன். அயனாவரம்.ரூ.200.
திருமதி.என்.பவித்ரா.கொளத்தூர். ரூ.300.
திரு.ஆர்.பட்டாபி சீத்தாராமன், சென்னை, ரூ.300
திருமதி.உமா முருகன்,சின்னாளபட்டி, ரூ.200.
திரு.சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
திரு. கார்த்திகேயன்.கதிர். ரூ.200.
திரு.குமரன் ஸ்டோர்ஸ் டிராவல்ஸ் பெரியார் நகர். ரூ.200.
திரு.கே.ராமமூர்த்தி.எல்.ஐ.சி. ஏஜெண்ட்.கொளத்தூர். ரூ.200.
திரு.விஜயன்.சி.சி.பி. மேனேஜர். ஓய்வு.கொளத்தூர்.ரூ.200.
திருமதி.ஜெயந்தி தியாகராஜன், மாவுத்தன்பட்டி.ரூ.200.
திரு.சூர்யா. கேபிள்.டி.வி. மாவுத்தன்பட்டி. ரூ.150.
திருமதி.பிரியா குடும்பத்தார். அயனாவரம்.ரூ.100.
திருமதி. பிச்சையம்மாள்.பெரம்பூர். ரூ.100
திரு.சிவா அரிசி கடை.பெரியார் நகர். ரூ.100.
திரு.அகஸ்டின் குடும்பத்தார். திருநீர்மலை. அரிசி 1 மூட்டை.
செல்வி. ரித்திகா லோகநாதன். அயனாவரம். அரிசி 1 மூட்டை

என் பொருட்டு நீ பிறருக்கு செய்யும் அன்னதானத்தின் ஒவ்வொரு பருக்கையும் என் வாயில் இடுவதாக அர்த்தம்.

சந்தா செலுத்தும் அன்பர்களுக்கு...

* 1 வருட சந்தா – ரூ. 220 (தபால் செலவு உள்பட)
* 3 வருட சந்தா – ரூ. 550 (தபால் செலவு உள்பட)
* **5 வருச சந்தா - ரூ.1000 (தபால் செலவு உள்பட)**
* ஆயுள் சந்தா – ரு. 2,000 (தபால் செலவு உள்பட)

காணிக்கை, சந்தா அனுப்புகின்றவர்களுக்கு மாதம்தோறும் சாயிமகராஜ் குருவை தேடி புத்தகம் உங்கள் இல்லம் தேடி வரும். காணிக்கை சந்தா அனுப்புகிறவர்கள் தவறாது தங்கள் முகவரியை கீழ்கண்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

V. ஸ்ரீராம், ஆசிரியர்
'சாயி மகராஜ் குருவை தேடி',
17/7 A, பழனியப்பா முதல் தெரு, முதல்மாடி,
அயனாவரம், சென்னை – 600 023.

ஆன்லைன் மூலம் காணிக்கை, சந்தா செலுத்த...

V.SRIRAM
INDIAN BANK (Purasaiwakkam Branch) Chennai
AC.No: 6219480677
IFS Code No: IDIB000P056.

புத்தக வளர்ச்சி நன்கொடையாளர்கள்

* திரு. கதிரேசன். ஸ்ரீ இராமார்ப்பணம் டிரஸ்ட். கொட்டையூர். ரூ.500 * திரு. செகன்நாதன். முகப்பேர். ரூ.500
* திரு. சாய்கிருபா. வாடிப்பட்டி.ரூ.500.
* திருமதி. ஜெயலட்சுமி தேவக்குமார். பெரம்பூர். ரூ.200.
* திரு. டி.எஸ். கிருஷ்ணமூர்த்தி. கோவை. ரூ.150
* திரு.வேணுகோபால்.நங்கநல்லூர்.100.
* திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர் ரூ.100
* திரு.ஸ்ரீ. ஸ்ரீனிவாசன்.நங்கநல்லூர்.ரூ.100

Owned, Publishsed and Printed by: V.SRIRAM. From17/7A, Palaniappa 1st Street, 1st Floor, Ayyanavaram, Chennai-23.At Printed by him at JAYANTHI PRINTERS at No.5.GOVINDARAJAN STREET, PULIYURPURAM, KODAMBAKKAM, CHENNAI -600 024.Editer: V.SRIRAM.





எங்களிடம் மாட்டு கொழுப்பு, ரசாயணம் கலக்காத சுத்தமான தேங்காய் எண்ணெய், வேப்ப எண்ணெய் கொண்டு கைகளால் தயாரிக்கப்பட்ட குளியல் சோப் கிடைக்கும்.

விபரங்களுக்கு:
ஸ்ரீசாய்ராம் ஆத்மஞான சபை, அயனாவரம் – 23.
போன்: 9941816692, 8825831068.



சாய் ராஜயோகாவின் தயாரிப்பு

அமிர்த சூரணம்

அனைத்து நோய்களுக்கும் ஒரே தீர்வு. தொடர்ந்து மூன்று மாதம் எடுத்துக் கொள்ள அதிசயத்தக்க மாற்றத்தை நீங்களே உணரலாம்.

குப்பைமேனித் தைலம்

அனைத்துவித தமான தோல் நோய்களுக்கும் ஓர் அற்புத தீர்வு. சொறி, நமைச்சல் இருக்கும் இடங்களில் தடவ ஒரிரு நிமிடத்திலேயே குணம் கிடைக்கும்.



தேவைக்கு தொடர்பு கொள்ளவும்:
சாய் ராஜயோகா இயற்கை நல்வாழ்வு மையம்
9941816692,
8825831068.

Sai maharaj Guruvaithedi -Tamil monthly - Registered with Registrar of Newspaper for India under no . TNTAM/2019/78281

தலைமுடி பிரச்சனைகள் அனைத்திற்கும் 25 மூலிகைகள் அடங்கிய அட்சயா ஹேர் ஆயில் மூலம் ஒரே தீர்வு!



* இயற்கையான பாரம்பரியமுறைப்படி தயாரிக்கப்பட்ட உன்னத ஹேர் ஆயில்.
* பொடுகு, பேன் நீக்கி கருமையான, அடர்த்தியான கூந்தலைப் பெறலாம்.
* இளநரை,செம்பட்டை, முடி உதிர்வு, முடி பிளவு போக்கும்.
* தூக்கம் இன்மை, டென்ஷன் சரி செய்யும்.
* ஆண், பெண் இருவருக்குமானது.

சாய் இராஜ யோகாவின் சீயக்காய் ஹேர்வாஷ் பவுடர்



100 சதவீதம் இயற்கையான பாரம்பரிய முறைப்படி தயாரிக்கப்பட்ட சீயக்காய் பவுடர்



அமிர்தா மூலிகை டீ தூள்

ஆவாரம் பூ, செம்பருத்தி, தாமரை, ரோஜா, துளசி, வேப்பம்பூ, சுக்கு,மிளகு,திப்பிலி,கிராம்பு,சித்தரத்தை, ஏலக்காய் கொண்டு தயாரிக்கப்பட்டது. நீரிழிவு, இதயநோய், இருமல், சளி, இளைப்பு, தலைச்சுற்றல், உடல் பலவீனம் நீங்கும். நல்ல செரிமானம் ஆகும்.

அமிர்தா வேலம்பட்டை பல்பொடி



பல்வலி,சொத்தை,கூச்சம்,பல் ஆட்டம்,ஈறு வீக்கம்,துர்நாற்றம், முதலிய பல் நோய்களுக்கு மிகச் சிறந்த பல்பொடி.

விபரங்களுக்கு: ஸ்ரீ சாயிராம் ஆத்மஞான சபை
99418 16692, 88258 31068